For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

ஆகஸ்ட் 2024 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் விலை : ரூ 60 இதழ் 51

## பேராயர் அசரியா

150 Anniversary





HTTPS://CHRISTIANHISTORICALSOCIETY.IN/



# கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்

2.2.3(4), North Street, Bungalow Surandai-627859, Tenkasi district

ஆங்கிலிக்கன் திருச்சபையின் முதல் இந்திய அத்தியட்சர், மகோன்னத இந்திய கிறிஸ்தவத் தலைவர், அனைத்துலகக் கிறிஸ்தவ திருச்சபை மேதாவி என்று பெரும் புகழ் படைத்தவரும் மற்றும் இந்திய மிஷனெரி சங்கத்தின் நிறுவனர், கிறிஸ்தவ வாலிபர் சங்க செயலர் என ஒப்புயர்வற்ற மிஷனெரியுமான

# பேராயர் V.S அசரியா

அவர்களின்

நூற்றி ஐம்பதாவது பிறப்பு விழாவைக் கொண்டாடும் விதமாக நடத்தப்படுகின்றன.

150th YEARS ANNIVERSARY celebration

## கட்டுரைப் போட்டி


## தலைப்பு: பேராயர் அசரியா என்னும் மாபெரும் தலைவனின் உருவாக்கமும் மெருகேற்றலும்

1st PRIZE ₹ 30,000

2nd PRIZE ₹ 20,000

3rd PRIZE ₹ 10,000

1. கட்டுரைகள் எங்கும் இதுவரை வெளியிடப்படாததாக இருக்க வேண்டும்.
2. கட்டுரைகள் பக்கங்கள் ஒருங்குறியில் (Unicode) அமைய வேண்டும். கணினியில் தமிழில் தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும். எழுத்தளவு 12 இருக்க வேண்டும்.
3. கட்டுரைகளை **31 அக்டோபர் 2024** க்குள் நிறைவு செய்து .doc அல்லது .pdt கோப்பு வடிவில் christianhistorical@gmail.com அனுப்ப வேண்டும்.
4. கட்டுரைகளில் உள்ள சொற்களின் எண்ணிக்கை A4 தாள் பக்க அளவு, இடம்பெறக்கூடிய கட்டுரைகளுக்கு அளவு 10 பக்கங்கள் வரை இருக்கலாம்.
5. பரிசு பெறும் கட்டுரைகள் மட்டுமல்லாது, பொருத்தமான கட்டுரைகள் அனைத்தையுமே வெளியிடக் கூடிய நூலில் இடம்பெறச் செய்ய உள்ளோம்.
6. தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது. சிறந்த கட்டுரைகளுக்கு ஆறுதல் பரிசு உண்டு. போட்டியில் பங்குபெற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.
7. பரிசளிப்பு பிறந்த நவம்பர் மாதத்தில் வழங்கப்படும். தேதி பின்னர் அறிவிக்கப்படும்.
8. கட்டுரைகளை மதிப்பீடு செய்வதற்கு அவ்வத்துறைகளில் உரிய கல்வித் தகைமைகளும் அநுபவமும் வாய்ந்த நடுவர்கள் உள்ளனர்.
9. கட்டுரை தொகுப்புடன் ஆசிரியர்களின் தங்கள் வாழ்க்கை குறிப்பினை 500 சொற்களுக்கு மிகாமல் எழுதி தங்கள் முகவரி, தொடர்பு எண், மின்னஞ்சல் புகைப்படத்துடன் கட்டாயம் அனுப்ப வேண்டும்.



**தலைவர்**
ASAR. பாலச்சந்திரன்

**செயலர்**
மன்னா செல்வகுமார்

# பதிப்பாசிரியரிடமிருந்து..

கிறிஸ்துவுக்குள் அன்பான வரலாற்றுச் சுவடுகள் வாசகர்களே,

ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.


ஆகஸ்ட் மாதம் நமக்கு ஒரு சிறப்பு மாதமாகும். பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து இந்தியா சுதந்திரம் அடைந்தது, அதனைத் தொடர்ந்து. 1947 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15ஆம் தேதி சுதந்திர தினம் அல்லது சுகந்திர திவாஸ் என்று கொண்டாடி வருகின்றோம். இந்த ஆண்டில் நம் இந்திய தேசத்தின் 78 வது சுதந்திர தின விழாவை கொண்டாடுகின்றோம். அதே வேளையில் ஆகஸ்ட் 17ம் நாள் ஆங்கிலிக்கன் திருச்சபையின் முதல் இந்திய அத்தியட்சர், தோர்ணக்கல் அப்போஸ்தலர், மகோன்னத இந்திய கிறிஸ்தவத் தலைவர், அனைத்துலகக் கிறிஸ்தவ திருச்சபை மேதாவி என்று பெரும் புகழ் படைத்தவரும் மற்றும் இந்திய மிஷனெரி சங்கத்தின்(IMS) நிறுவனர், இந்திய தேசிய மிஷனரி சொசைட்டி நிறுவனர் (NMSI) கிறிஸ்தவ வாலிபர் சங்க செயலர் (YMCA) என ஒப்புயர்வற்ற மிஷனெரியுமான பேராயர் வே.சா.அசரியா அவர்களின் 150 வது (நூற்றி ஐம்பது) பிறப்பு விழாவைக் கொண்டாடுகின்றோம். அதை கொண்டாடும் விதமாக வரலாற்றுச் சங்கத்தின் சார்பில் பல நிகழ்ச்சிகளை கொண்டாட இருக்கின்றோம். பேராயர் அசரியா அவர்களை குறித்த பணிகள் நிச்சயமாக நம் இளம் தலைமுறையினரை ஊக்குவித்து அவர்களை மிஷனரி ஊழியத்தில் ஆண்டவருடைய மகிமைக்காகவும் அவருடைய இராஜ்ஜியத்தின் பரப்புதலுக்காகவும் பெரும் சாதனைகளைச் செய்திட அழைப்பதற்கு இது ஒரு முயற்சி. இப்பணிக்காக தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இவ்விதழளை வாசிக்கும் நேயர்கள், மிஷனெரிகள் மற்றும் ஊழியர்களின் தியாகங்களை மற்றவர்களோடு கூட பகிர்ந்துக் கொண்டு, மிஷனெரிகள் ஏற்றிய அந்த தியாக தீபத்தை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கட்டாய பணியாகும். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, புதுப்பிக்காதவர்கள் மாத சந்தாவை புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க நூலக மற்றும் அருங்காட்சியகம் கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து தாங்கவும் ஜெபிக்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பாரபரனின் பணியில்

manna selvakumar



கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
**G-Pay** மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

| | |
|---|---|
| Name | : Christian Historical Society |
| A/c Number | : 1748 020000 4906 |
| Bank name | : Federal Bank |
| IFSC code | : FDRL0001748 |

இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு.
சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,


**Contact Us**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

9176780001 www.christianhistoricalsociety.in christianhistorical@gmail.com

**V.Samuel Abraham**

Regional Coordinator – South Asia,
The Shepherd's Academy,




# அசரியா என்னும் சகாப்தம்

## ஒரு திசை காட்டும் வரலாறு

நவீன யுகத்தில் ஐரோப்பாவிற்கு வெளியே இருந்து எழும்பிய மாபெரும் கிறிஸ்தவத் தலைவன்! தோர்ணக்கல் என்னும் சிறு மிஷனெரிப் பணித்தளத்தை, இந்தியாவிலே வெகுவேகமாக வளர்ந்த மிஷனெரிப்பணியின் மையமாகவும், வளர்ந்து பெருகிக்கொண்டிருந்த இந்திய-ஆங்கிலேயேப் பேராயத்தின் தலைமையகமாகவும் மாற்றியவர். தென்னிந்தியாவில் எழும்பிக்கொண்டிருந்த கிறிஸ்தவ சபைகள் சுயாதீனம் பெற வழிவகுத்த, கற்பனைத் திறன் மிக்க, வரம்பெற்ற முன்னோடி. மறுமலர்ச்சி கால சபைப்பிளவிற்குப் பின்னர், பேராய ஆளுகை முறையுள்ள ஆங்கிலேயத் திருச்சபையை வேறுவித கட்டமைப்புகளுள்ள சபைகளுடன் இணைப்பதில் உலகத்திலேயே முதல் வெற்றிகண்ட தரிசனத் தலைவர்.

இப்படி ஒவ்வொரு வரலாற்று எழுத்தாளரின் பார்வையிலும் வெவ்வேறு சிறப்புகளை வெளிப்படுத்தும் ஒரு பல்நோக்கு சாதனை வீரர், ஒரு மகத்தான தேவ மனிதர்...

### 'திருநெல்வேலி'யின் வேதநாயகம் சாமுவேல் அசரியா

மாவட்டங்களும், திருமண்டிலங்களும் வெவ்வேறாய்ப் பிரிக்கப்பட்டு, தனித்தனியே இயங்கும் இக்கால மாறுதலில், வரும் நாட்களில் இந்த உலகப் புகழ் பெற்ற அடைமொழி மாறலாம்.

ஏனென்றால், வெள்ளாளன்விளை-மெஞ்ஞானபுரம் சபைகள் (கிறிஸ்தவ சமுதாயம்) மற்றும் பள்ளிகளின் ஆரம்பகாலத் தாக்கமே அவரது அடிப்படை அஸ்திபாரம். ஆயினும், ஒரு இளம் வாலிபனாக அக்கால அகண்ட திருநெல்வேலி பிரதேச (திருமண்டில) சபைகளில் மிஷனெரி பாரத்தை ஏற்படுத்தி, இந்திய மிஷனெரி சங்கத்தில் ஈடுபடச் செய்த அவரது அருட்பணித் தலைமைத்துவம் அவரை நம் ஒருங்கிணைந்த திருச்சபைகளின் மகுடமாக எல்லோரும் பெருமையுடன் உரிமை கொண்டாடச்செய்கிறது.

ஆனால், இவற்றையெல்லாம் தாண்டி, அவரை உலகப் புகழ் பெற்ற **'தோரணக்கல்லின் அசரியா'** என்னும் அடைமொழி பெற்ற சபைத்தலைவராக மாற்றியது எது?



அது அவரது 32-வருட கால 'மிஷனெரி மற்றும் சபைப் பணி'.

ஆம், ஆவிக்குரிய வாழ்வு, சுவிசேஷம், திருச்சபை, பயிற்சி, முழுமையான சமுதாய மறுமலர்ச்சி, சுதேச சபை தலைமைத்துவம், மற்றும் சபைகளின் ஐக்கியம் என்னும் ஆழமான முன்னுரிமைகள் அவரது வாழ்வையும் முயற்சிகளையும் வடிவமைத்தன, அவரது எல்லைகளை விரிவாக்கின.

அதினால் தானோ என்னவோ, 1909-லே தனக்கு வழங்கப்படக் காத்திருந்த உலகளாவிய YMCA பதவிகளையும் உதறிவிட்டு, ஒரு சாதாரண மிஷனெரியாகச் செல்ல தன் குடும்பத்துடன் அர்ப்பணித்தார். பின்னர், தோரணக்கல் பேராயராகப் பணியாற்றிக்கொண்டிருந்த அவருக்கு திருநெல்வேலிப் பேராயராகப் பணியாற்றும் வாய்ப்புக் (1928) கிட்டியபோது, அதனையும் மறுத்துவிட்டார்.

அவர் தோர்ணக்கல்லில் IMS மிஷனெரிக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டதும், அவருக்கு குருப்பட்டம் வழங்க சிபாரிசு செய்யப்பட்டதும், சீக்கிரமே அவர் அங்கே பேராயராக நியமிக்கப்பட்டதும் தேவனாலே ஏற்பட்டதே அன்றி வேறல்ல. ஆகவே தான், அவர் பேராயராக அபிஷேகம் பெற்றபின், மெஞ்ஞானபுரம் ஆலயத்திலே நிகழ்ந்த அவரது வரவேற்பு ஆராதனையிலே அவர், 'நம்முடைய தாழ்விலே நம்மை நினைத்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது' என்று செய்தியளித்தார்.

## மாபெரும் வளர்ச்சி

வறண்ட தெலுங்குப் பிரதேசம் என்று சொல்லப்பட்ட ஆந்திராவில் சில பகுதிகளிலே 1850-களிலிருந்து தேவனுடைய எழுப்புதலின் காற்று வீசினதினாலே, சமுதாயத்திலே ஒதுக்கப்பட்ட பலமக்கள்கூட்டம்கூட்டமாய் ஆண்டவரண்டைவர ஆரம்பித்தனர். சென்னைப் பேராயர் ஒயிட்ஹெட் தன் பொறுப்பிலே இருந்த இப்பகுதியின் ஊழிய வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல், தனக்கு ஒரு உதவிப் பேராயர் வேண்டுமென்று ஜெபிக்கிறார்.

இதன் மத்தியிலே 1903 முதல் IMS தன்னுடைய மிஷனெரி ஊழியத்தை அங்குள்ள தோர்ணக்கல்லிலே ஆரம்பித்து, வளர ஆரம்பிக்கிறது. இதனிடையே, அசரியா தேவ அழைப்பிற்கு கீழ்ப்படிந்து, NMS மற்றும் IMS-ல் தனது தலைமைப் பொறுப்புகளை உதறிவிட்டு, அங்கே மிஷனெரியாகச் செல்கிறார். தனக்குக் கொடுக்கப்பட்ட எதிர்பாராத மிஷனரி மற்றும் சபைத் தலைமைப் பொறுப்புகளுடன் 1909 முதல் பணியாற்ற ஆரம்பிக்கிறார்.

அதின் பின்னர், 1912-ம் ஆண்டின் இறுதி முதல் தோர்ணக்கல் பேராயத்தின் தன்னாட்சி பெற்ற (உதவிப்) பேராயராக, ஆந்திராவில் ஊழியம் செய்து கொண்டிருந்த CMS, SPG மற்றும் IMS மிஷனெரிப்பணிகளையும், ஊழியர்களையும், அவர்களது சபைகளையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தம் திருப்பணியைத் தொடருகிறார். 1930-ல் தோர்ணக்கல் என்னும் தனிப்பேராயத்தின் முழுப்பொறுப்பு மிக்க பேராயராகிறார்.

## விளைவுகள் என்ன?

| வருடம் | 1915 | 1925 | 1935 | 1945 |
|---|---|---|---|---|
| ஞானஸ்நானம் பெற்றோர் | 1,035 | 2,479 | 6,112 | 10,001 |
| திருமுழுக்கு ஆயத்தப் பயிற்சியில் | 912 | 1,354 | 3,472 | 2,042 |
| திருவிருந்து பெறுவோர் | 179 | 438 | 993 | 1,178 |
| சபைகள் | 56 | 100 | 137 | 143 |
| சபை ஊழியர்கள் /போதகர்கள் | 41 | 40 | 38 | 38 |
| உறைவிடப் பள்ளி மாணவர்கள் | 62 | 67 | 70 | 69 |

Table - இந்திய மிஷனெரிச் சங்க ஊழிய வளர்ச்சி – தோர்ணக்கல் பணித்தளம். (நன்றி – D. A. Christadoss, Bishop Azariah, TCHS, 2023, p. 87]

தோர்ணக்கல் திருமண்டிலத்தில் 1921-1931 ஆண்டுகளிலே சராசரியாக ஒவ்வொரு மாதமும் 12,000 பேர் ஆண்டவரை ஏற்றுக்கொண்டார்கள். 1925-ஆம் ஆண்டில் மட்டும் 17,000 புதிய கிறிஸ்தவர்கள் சபையிலே இணைந்தார்கள். மொத்த எண்ணிக்கை 45 வருடங்களிலே (1894-1940) பத்து மடங்கு பெருகியது.

[Compiled from various sources and filtered and simplified for the purpose of the article. Ref. Eddy (1945), Hodge (1946), Harper (2000) and Azariah (1938) for full details]

| வருடம் | 1909 | 1912 | 1919 | 1935 | 1943 | 1945 |
|---|---|---|---|---|---|---|
| பேராயத்தின் மொத்தக் கிறிஸ்தவர்கள் | 30,000 | 56,000 | 77,000 | 2,18,000 | 2,30,000 | 2,50,000 |
| கிராம ஊழியர்கள்/ ஆசிரியர்கள் | | | | 2,000 | | |
| திருமுழுக்கு ஆயத்தப் பயிற்சியில் | | | 29,000 | | 33,000 | |
| சபை ஆயர்கள் மற்றும் மிஷனெரிகள் | | | 72 | 61 | 250 | 177 |
| தன்னார்வ ஊழியர்கள் | | | 710 | | 1736 | |
| காணிக்கை | | | 40,000 | | 1,04,000 | |

## இந்த மாபெரும் வளர்ச்சியில் அசரியாவின் பங்களிப்பு

1. உள்ளூர்ச் சபையே அருட்பணிக்கான தேவனுடைய ஏற்பாடு என்று உறுதியாய் நம்பிய அசரியா, வெகு சீக்கிரமே புதிய விசுவாசிகளை ஒருங்கிணைத்து, சபைகளை உருவாக்கினார். விசுவாசிகள் ஆரம்பம் முதலே சேர்ந்து வளர வழிவகுத்தார்.
2. சபைகள் விசுவாசிகளின் சாட்சியுள்ள வாழ்க்கை மற்றும் சாட்சி பகிருதல் மூலமாகவே வளர்ந்து பெருகும் என்பதை ஆணித்தரமாக விசுவாசித்த அவர் - தெளிவான, நீண்டகால (6 - 18 மாதம்) போதனைக்குப் பின்னரே அவர்களுக்குத் திருமுழுக்கு அளித்தார். அதின் பின்னர், மறுபடியும் தரமுள்ள ஆயத்தத்திற்குப் பின்னரே அவர்களுக்குத் திடப்படுத்தல் அளித்து, சபையின் முழு அங்கமாக்கினார்.
3. திருமுழுக்குப் பெற்ற விசுவாசிகள் ஒவ்வொருவரும் தன்னார்வமாக சுவிசேஷம் அறிவிப்பதற்கான உறுதிமொழி எடுத்தனர், அதை நிறைவேற்றினர்.
4. இத்தகைய மறுமலர்ச்சி பெற்று வாழும் விசுவாசிகளைக் காணும் ஆர்வமுள்ள பிற கிராமத்தினர் 'எங்களுக்கு ஒரு ஆசிரியரை அனுப்புங்கள்' என்று அனுப்பும் வேண்டுகோளுக்கு ஏற்ப, தகுந்ததொரு கிராம ஆசிரியர் (உபதேசியார்?) அங்கே அனுப்பப்படுவார். அவர் குடும்பமாய் அங்கே தங்கியிருந்து, திருமுழுக்கு ஆயத்தப் போதனைகளில் ஆரம்பித்து, அந்த சபை முழுமையாய் உருவாகி, சபையின் உள்ளூர்த் தலைவர்கள் அடையாளம் காணப்பட்டதும், அடுத்த இடத்திற்குச் செல்லுவார். இதற்கு சுமார் ஒரு வருடமே ஆனது!
5. சீக்கிரமே அங்குள்ள இயல்பான (சமுதாயத்) தலைவர் அனுதின காலை மாலை ஆராதனைகள் நடத்தி போதனை கொடுக்கும் பொறுப்பை ஏற்பார். சபை ஒழுங்கு நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக மூப்பர்கள் அடங்கிய சபை பஞ்சாயத்து ஒருங்கிணைக்கப்படும். பெண்களும் அதிலே இடம் பெற்றனர். அபிஷேகம் பெற்ற ஒரு போதகர் சாக்கிரமெந்துகளுக்காக மாதமொரு முறை இந்த தற்சார்புள்ள சபையைச் சந்திப்பார்.
6. தம் சபைகளின் தரம் மற்றும் தொடர் வளர்ச்சிக்கான காரணம் என்னவென்று கேட்டால், எம் சபைகளின் அனுதின காலை-மாலை ஆராதனைகளும் அங்கே ஒழுங்காகக் கொடுக்கப்படும் வேத போதனைகளுமே என்பார் மிஷனெரிப் பேராயர் அசரியா!
7. குறிப்பாக - குடிபோதைக்கு ஆளாயிருந்த அந்த சமுதாயங்கள் தம் இரண்டாம் தலைமுறையில் முற்றிலுமாக விடுதலை பெற்றிருந்தன. அசுத்தத்திற்குப் பேர்போன அந்த மக்கள் கூட்டத்தின் அழகிய உருமாற்றம், உயர் ஜாதி மக்களைத் திரும்பி பார்க்க வைத்தது, கிறிஸ்துவிடம் ஈர்த்தது! முழுநேரத் திருடர்கள் மனம் மாறி, உயிருள்ள சாட்சிகளாய், சபை மேய்ப்பர்களாய் நற்பணியாற்றினர்.
8. சபை மேய்ப்பர்களே சபை வளர்ச்சியின் ஆணிவேர் என்பதைக் கண்டுகொண்ட அசரியா, அவர்களை உருவாக்குவதற்கு முழுக்கவனம் செலுத்தினார். காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப தகுந்த பயிற்சித் திட்டங்களை உருவாக்கி, பாடங்களை ஆயத்தம் செய்து, பயிற்சியில் நேரடியாக ஈடுபட்டார். கிராம ஆசிரியர் (உபதேசியார்) பயிற்சி மையம் மற்றும் அபிஷேகம் பெறும் சபைப் போதகர்களுக்கான தோர்ணக்கல் இறையியல் பள்ளி இந்த தரிசனம் மற்றும் தேவையின் வெளிப்பாடுகளே. எழுப்புதல் செய்தியாளர்களையோ அல்லது இறையியல் பேராசிரியர்களையோ உருவாக்குவது அவரது நோக்கமல்ல. மேய்ப்பரின் இதயமும் போதிக்கும் திறமையுமுள்ளவர்களை உருவாக்குவது தான் அவரது எளிய இலக்காயிருந்தது.
9. கிறிஸ்தவ சமுதாயங்களின் நிலையான உருமாற்றத்திற்காக அடிப்படைக் கல்வியுடன் சில கைத்தொழில் பயிற்சிகளை மாணவருக்கு அசரியா வழங்கினார். உயர் கல்வியைவிட தொழிற்கல்வியே உழைப்பின் மகத்துவத்தை உணரவும், தத்தம் சமுதாயங்களிலே ஒளிவீசவும் இம்மக்களுக்குதவும் என்பது அவரது வாதம். இதனால் பயன்பெற்றோர் பலர்.
10. சபைகளில் மிஷனெரிகளைவிட உள்ளூர் விசுவாசிகளே முக்கியமானவர்கள் என்பதைப் பலவிதங்களில் வெளிப்படுத்திய அசரியா, தாம் ஏற்படுத்திய சபை நிர்வாக அமைப்புகளிலும் அதை உறுதிசெய்தார். விசுவாசிகளே குருப்பட்டம் பெறுவதற்கான பயிற்சிப் போதகர்களைத் தெரிந்தெடுத்தனர்.
11. எடின்பரோ (1910) மாநாட்டில் பணித்தளச் சபைகளின் சம உரிமைக்காகவும், சுதேச தலைமைத்துவத்திற்காகவும் குரல் கொடுத்த அசரியா, மிஷனெரிகள் முழுமையாக வெளியேறவேண்டும் என்று ஒருபோதும்

கூறவில்லை. எழும்பி வரும் சுதேச சபைகளில் உள்ளூர்த் தலைமைத்துவம் அங்கீகரிக்கப்படவேண்டும். அவர்களுடன் இசைந்து மிஷனெரிகளும் தங்கள் சிறப்புத் திறமைகளுடன் ஊழியங்களில் உதவவேண்டும், சபைகளை ஸ்திரப்படுத்தவேண்டும் என்றார். அதையே தோர்ணக்கல்லிலும் முழுமையாய் செயல்படுத்த முயன்றார்.

இப்படிப்பட்ட வேதாகம அடிப்படைகளைத் தம் ஊழியத்தில் தீர்க்கமாக செயல்படுத்திய அசரியாவின் தலைமையில் தோர்ணக்கல் பேராயமும் அதன் ஒரு அங்கமாக இந்திய மிஷனெரிச் சங்கத்தின் தாக்கமும் வளர்ந்து பெருகின. அனைத்து இந்திய சபைகளின் ஒற்றுமைக்காக அவர் எடுத்த முயற்சிகள் அவரது மறைவிற்குப் பின்னர் பலன் தந்தன. அவர் ஏற்படுத்திய ஊழிய மற்றும் நிர்வாக முறைகள் அவரது எதிர்பாராத மறைவிற்குப் பின்னரும் பேராயம் தொடர்ந்து வளரவும் பெருகவும் உதவின.

**இன்றைய சவால்**

1. சபைகளில் சுதேச தலைமைக்காக எப்போதும் குரல் கொடுத்த அசரியா தன் பேராயத்தில் மூன்று தலைமைப் போதகர்களையும், ஒரு உதவிப் பேராயரையும் நியமிக்கும்போது ஏன் ஐரோப்பியர்களைத் தெரிந்துகொண்டார் என்பது அவரது வரலாறைப் படிக்கும் நமக்கு ஒரு புதிராகவே உள்ளது. ஆரம்பத்தில் சுதேச திருச்சபைத் தலைவராக உருவாகிய அசரியா, பாகுபாடுகள் அற்ற தேவனுடைய சரீரமாகிய உலகளாவிய திருச்சபைத் தலைவராய் முதிர்ச்சி அடைந்ததை இது பிரதிபலிக்கிறதோ?
2. இன்றைய இந்திய மிஷனெரிப் பணியின் சூழலில், சென்னைப் பேராயர் ஹென்றி ஒயிட்ஹெட் உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டியவர். இறையியல் பயிற்சி பெறாத இளம் இந்தியராகிய (உள்ளூர் விசுவாசி) அசரியாவை ஒரு தலைவராக அடையாளம் கண்டு, அவரைப் பேராயராக உயர்த்துவதற்காக சட்டங்களையும் சவால்களையும் சம்பிரதாயங்களையும் மேற்கொண்டு வெற்றிகண்ட அவர் இந்த வரலாற்றினூடே ஒரு மகத்தான தரிசனத் தலைவராய் மிளிர்கிறார்.

**எங்கே அத்தகைய தலைவர்கள்?**

அசரியாவின் சுருக்க வரலாற்றை எழுதியுள்ள மிஷனரி ஹாட்ஜ் (1945) இப்படி பதிவுசெய்கிறார்: நவீன யுகத்தின் சபைகளும் மிஷனெரிச் சங்கங்களும் தற்கால அசரியாக்களை அடையாளம் காணத் தவறிவிட்டன. . . இத்தகைய முடிவுகளில் கூடுதல் விசுவாசமும், குறைவான எச்சரிக்கையும் அவசியம். இல்லாவிடில், . திறமைமிக்கப் பலர் ஒதுக்கப்பட்டவர்களாய், முறுமுறுப்புள்ள ஊழியராகத் தொடர்வார்கள், அல்லது வேறு பணிகளுக்குச் சென்றுவிடுவார்கள்.


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

“கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்”
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
‘கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்’
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
tchsportal.co.in

ந. சூரிய மூர்த்தி,

முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்மொழித் துறை, சென்னைப் பல்கலைக்கழகம் - 05

# அறியப்படவேண்டிய ஆளுமை:

## இராவ்சாகிப், தஞ்சை மு. ஆபிரகாம் பண்டிதர்



ஆபிரகாம் பண்டிதர் தமிழிசைத் துறையில் மட்டுமே மிகப்பெரிய, தவிர்க்கமுடியாத பங்களிப்பைச் செய்திருப்பதாகவே வரலாறு நமக்குக் காட்சி தந்துகொண்டிருக்கின்றது. அதற்கு அடுத்த நிலையில் விவசாயம், சித்த மருத்துவம், அச்சுப்பணி ஆகியன கவனம் பெறுகின்றன. ஆனால் புகைப்படம் எடுத்தல், சோதிடம் முதலானவற்றில் அவரது பங்களிப்புகள் பேசத்தக்கனவாய் மட்டுமே இருக்கின்றன. அவற்றிலும் அரிதாகத் தமிழ் குறித்த பணிகளென்பது, 'அவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினர்' என்ற அளவிலேயே தமிழுலகிலும் ஆய்வுலகிலும் நிலவி வருவது பெரிதும் கவனத்திற்குரியது.

உ.வே.சாமிநாதையர், திரு.வி.க., மறைமலையடிகள், கா. நமச்சிவாய முதலியார், மு. இராகவையங்கார் முதலான பெரும் தமிழறிஞர்களோடு சமகாலத்தில் வாழ்ந்தவர்; பழகியவர். தமது பெருநூலிலும் தமிழ் மொழி பற்றிய விரிவான, ஆழமான ஆய்வினை எடுத்தியம்பியவர். இவற்றை ஒருபுறம் விடுத்துப் பார்க்கினும் பண்டிதர் தமிழ் மொழிக்கென வரலாற்றில் குறிப்பிடத் தகும்படி கணிசமான அளவு பங்காற்றியுள்ளார். அவை பற்றிய தகவல்கள் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. அவற்றை இத்தமிழ்ச் சமூகம் அறியும்வண்ணம் தொகுத்தளிக்க வேண்டும் என்னும் விழைவில் உருவானதே இக்கட்டுரை.

### பண்டிதரின் தமிழறியுஞ் சங்கம்

தஞ்சையிலேயே இசை ஆராய்ச்சிக்கெனப் பண்டிதரால் உருவாக்கப்பட்டது **'தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கம்'**. 1912 முதல் 1916 வரையிலான நான்கு ஆண்டுகளில் ஏழு இசை மாநாடுகளை நடத்தி, தமிழிசைத் துறையில் மிகப்பெரிய மாற்றங்களுக்கு வித்திட்டது இச்சங்கம். (இச்சங்கம் பற்றிய மேலதிக விவரங்களுக்கு ஜீன் மாத கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் இதழைப் பார்க்க).

ஆனால் இதற்கும் முன்னதாக 1901-இல் பண்டிதர், ஒரு சங்கம் நிறுவி அதன்வழியாகப் பலகலை வடிவங்களைத் தமது தலைமையில் அச்சங்கத்தினருக்குத் தக்க சான்றோர்களை நியமித்துப் பயிற்சியளித்துள்ளார். தாம் செய்யும் அவிழ்தங்கள், நூல்கள், தமது பண்ணை, இல்லம் என எல்லாவற்றிற்கும் 'கருணாநந்த'ரின் பெயரைச் சூட்டும் குருபக்தி மிகுதியுமுள்ள பண்டிதர் இச்சங்கத்தையும் அவரது பெயராலேயே நிறுவினார். 'கருணாநந்தர் வைத்தியசாலை இல்லச் சிறுவர் தமிழறியுஞ் சங்கம்' என்பதே அச்சங்கத்தின் பெயர். தமது கருணாமிர்த சாகரத்திரட்டின் முன்னுரையில்,

"கருணாநிதி வைத்தியசாலை இல்லத்துத் தமிழறியுஞ் சிறுவர் அடைந்து வருஞ் சங்கீதப் பயிற்சியின் றொடக்கத்தில் அவர்களுக் குண்டாகக் கூடிய சொற்பிழை, சுரப்பிழை, தாளப்பிழைகள் நீங்கிச் சுத்த பாடமாகும் பொருட்டும்..." என்று 'சங்கம்' என்கிற சொல்லையே பயன்படுத்தாமல் பொதுநிலையில் எழுதியிருந்தார். இப்பதிவு, இப்படி ஒரு சங்கம் இருந்ததா? எந்த ஆண்டில் தொடங்கப்பெற்றது? அதன் செயல்பாடுகள் என்னென்ன? போன்ற வினாக்களுக்கு விடையளிக்காத வகையில்; இன்னும் சொல்லப்போனால் இப்படிப்பட்ட வினாக்களை ஊகிக்கக்கூட முடியாத வகையில் ஒரு சாதாரண தரவாகவே அது அமைந்துவிட்டது.

ஆனால் பின்னாளில் தன் தந்தையை நினைவுகூர்ந்த ஆ. அ. வரகுண பாண்டியன் 'செந்தமிழ்ச் செல்வி' இதழில் இச்சங்கம்பற்றி அரியதொரு குறிப்பைத் தந்திருந்தார். 'கருணாமிர்த சாகரர்' என்னும் தலைப்பில் (1951 - செப்டம்பர், அக்டோபர் என இரு மாதங்கள் தொடர்ச்சியாக வெளிவந்தது) தன் தந்தையின் நினைவாக அவரது வரலாற்றைச் சுருக்கமாக எழுத வந்தவர் இச்சங்கம் பற்றியும் எழுதி வரலாற்றைத் துலக்கம் பெறச் செய்தார். சேற்றிடை விழுந்த மணியெனக் கிடந்த இச்சங்கம் பற்றிய குறிப்பு அக்டோபர் மாத இதழில்,

'இவர் 1901-ஆம் ஆண்டினிறுதியில் 'கருணானந்தர் வைத்தியசாலை இல்லச் சிறுவர் தமிழறியுஞ் சங்கம்' எனப் பெயர்பூண்ட ஒரு சங்கத்தை நிறுவி, அதில் தம் மக்களையும், தம் உற்றார் உறவினரின் மக்களையும் அங்கத்தினர்களாக்கி, தாம் அதற்குத் தலைமை வகித்து, கட்டுரை வரைதல்,

சொற்பொழிவாற்றல், இசை பயிலல், நாடகமாடல் முதலிய பல அருநிகழ்ச்சிகளை அதன் அங்கத்தினரைக்கொண்டே தம் முன்னிலையில் நடத்தி இன்புற்றுக் களித்துவந்தார். ஒவ்வொரு ஞாயிறு மாலையிலும் அவர்கட்குத் தம் மறைகூறும் நன்னெறியினைப்பற்றி ஓதுவார். மிடற்றிசை, யாழிசை, கின்னரிஇசை, மேனாட்டு இசை, வரலாற்று இசை நிகழ்ச்சிகள் (கதாகாலட்சேபம்) முதலியவற்றில் தக்க பல ஆசிரியரைக்கொண்டு அவர்களைப் பயிற்றுவித்தும் வந்தார்... மேற்குறித்த சங்கமக்கட்கு அவரவரின் இசையாசிரியர்கள் கற்பித்த பிறமொழிக் கீர்த்தனங்கள், வர்ணங்கள், சுரகெதிகளானவற்றிற்கு, அரும்பொருள் நிறைந்த தமிழ்ப்பாக்களை இயற்றி அவற்றை அவர்களுக்குக் கற்பித்தும் வைத்தார்.'

எனப் பொலிவுறுகின்றது. வரகுண பாண்டியனின் இக்கூற்றில் கட்டுரை வரைதல், சொற்பொழிவாற்றல், நன்னெறி ஓதுதல் என்பவை தவிர்த்து, அச்சங்க மக்கட்குப் பெரும்பான்மையும் கலை வடிவங்களே பயிற்றுவிக்கப்பட்டுள்ளன. எனினும், சங்கத்திற்குத் 'தமிழறியுஞ் சங்கம்' எனப் பெயரிட்டு இசைத்தமிழ், நாடகத்தமிழ் முதலான கலைகளைத் தமிழில் பிணைக்கும் மரபு, தமிழ்மீது அவர் கொண்டுள்ள விசாலமான மனப்பாங்கையும் பற்றையும் காட்டுவதாகவே திகழ்கின்றது.

### மதுரைத் தமிழ்ச் சங்கம்

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினர், அதன் விருத்திக்கான விஷயங்களைக் கவனித்து, சங்கத்தை நடத்தி வந்த சான்றோர் பெருமக்களுள் பண்டிதரும் ஒருவர் என்கிற செய்தியே பல அறிஞர்களாலும் ஆய்வாளர்களாலும் பல இடங்களில் கையாளப்பட்டு வருகின்றது. அதோடு மட்டும் வரலாறு நின்றுவிடவில்லை. தமது தொடக்க காலத் தமிழிசை ஆய்வுகளை முன்வைக்க ஏற்ற களமாகவும் அச்சங்கத்தைப் பண்டிதர் பயன்படுத்திக்கொண்டார். அச்சங்கத்தினரால் வெளியிடப்பட்ட 'செந்தமிழ்' இதழில் இசை குறித்தான மூன்று கட்டுரைகளையும் வெளியிட்டார்.

1910-ஆம் ஆண்டு மார்கழியில் 'இந்தியாவின் சங்கீதம்' என்னும் வியாசமே செந்தமிழ் இதழில் வெளியான பண்டிதரின் முதல் வியாசமாக அமைகின்றது. பின்பு 1912-ஆம் ஆண்டு தாம் தொடங்கி நடத்திய தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கத்தின் முதலாவது சங்க ரிப்போர்ட்டைப் பாண்டியன் புத்தகசாலைக்கு அனுப்பிவைத்ததும் (1912-புரட்டாசி இதழில் 'புத்தகவரவு' பகுதியில் இச்செய்தி வெளியானது), அதன் பின்னர் 1914-ஆம் ஆண்டு இராமநாதபுரத்தில் நடைபெற்ற மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றாவது வருஷக்கூட்டத்தில் இரண்டு வியாசங்கள் வாசிக்கப்பட்டதும் கவனத்திற்குரியன. 'துவாவிம்சதி சுருதியின் பொதுக்குறிப்பு' என்னும் வியாசம் 1914-ஆம் ஆண்டு செப்டம்பர் - அக்டோபர் இதழிலும் 'சங்கீதத்தின் பெருமையும் அதன் உற்பத்தியும்' என்னும் வியாசம் அடுத்த வெளியீடான அக்டோபர் – நவம்பர் இதழிலும் வெளியாயின. ஆனால் பண்டிதர் நேரடியாகச் சென்று இவ்வியாசங்களை வருஷக்கூட்டத்தில் வாசித்தார் என்பதற்கான எவ்வித துணை ஆதாரங்களும் இல்லை. பின்னர், இசை ஆராய்ச்சிகளை நடத்திக்கண்ட முடிபுகளின் துணிபாக வெளியான கருணாமிர்த சாகரத்தின் முதற்புத்தகத்தையும் சங்கத்திற்கு அனுப்பி வைத்தார். அப்புத்தகம் 1917, ஆகஸ்டு மாதம் நெல்லையில் நடைபெற்ற மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதினாறாவது வருடோற்சவக் கொண்டாட்டத்தின்போது உ.வே.சா., ரா. ராகவையங்கார் முதலான அறிஞர் பெருமக்கள் நிறைந்த சபையில் வைக்கப்பட்டுள்ளது. அதுபற்றி 1917 செப்டம்பர் - அக்டோபர் இதழ்,

'பின்பு சங்கத்தின் கௌரவ காரியதரிசி ம-ਾ-ਾ-ஸ்ரீ T.C. ஸ்ரீநிவாச ஐயங்காரவர்களெழுந்து, தஞ்சை ஸ்ரீமான், ராவ்பகதூர், ஆபிரகாம் பண்டிதரவர்க ளரிதினியற்றி யச்சிட்டனுப்பிய 'கருணாமிருத சாகரம்' என்னும் சங்கீத சாஸ்திர புஸ்தகத்தைச் சபையில் வைத்து, அப்புத்தகத்தைப் பற்றிய சபையோர் அபிப்பிராயத்தை விரும்பிப் பண்டிதரவர்களெழுதிய கடிதத்தையும் படித்துக்காட்டவும் பொழுதானதுபற்றிச் சபைகலைந்தது'

என்று பதிவுசெய்துள்ளதன் வழி அறியமுடிகிறது. ஆனால் பண்டிதரின் கடிதத்தில் இடம்பெற்ற செய்தி பற்றியோ, சங்கத்தவர்களின் அபிப்பிராயம் பற்றியோ எவ்விதத் தரவும் காணக்கிடைக்கவில்லை.

### தஞ்சைத் தமிழ்ச் சங்கம்

மதுரையில் தொடங்கப்பட்ட நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தாய்ச் சங்கமென்று கூறிக்கொண்டு, அதே ஆண்டு (1901-இல்) தஞ்சையில் ஒரு தமிழ்ச்சங்கம் உருவானது. இத்தஞ்சைத் தமிழ்ச்சங்கத்திற்கு அக்கிராசனாதிபதியாய் விளங்கியவர் பாப்பாநாட்டு ஜமீன்தாராகிய ஸ்ரீமான். R. சுவாமிநாத விஜயதேவர் என்பவராவார். இச்சங்கம் ஒரு தமிழ்கலாசாலையும் நிறுவி மாணவர்களுக்குக் கல்விப் பயிற்சியையும் வழங்கி வந்தது. அதோடு நில்லாமல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் மெற்றிக்குலேஷன் வகுப்பினருக்கு நடத்தும் பரிட்சைக்குத் தங்கள் கலாசாலை மாணாக்கர்களைத் தெரிந்தெடுத்து ஆண்டுதோறும் அனுப்பி வைத்து அவர்களைத் தேர்ச்சியடையவும் செய்தது. சங்கம் தொடங்கப்பட்ட நான்காண்டுகள் கழிந்து 1905-இல் 'தமிழகம்' என்னும் இதழ் இச்சங்கத்தால் தொடங்கி நடத்தப்பட்டு வந்தது.

இப்படி முனைப்போடு தீவிரமாகத் தமிழ்ப்பணிகளைக் கலாசாலை, புத்தகசாலை, சங்க நூல்களைக் கற்பித்தல், சஞ்சிகைகளை வெளியிடல் எனப் பன்முகங்களில் செய்துவந்த சங்கம் நாளடைவில் தேய்ந்து நலிவுறும் நிலையிலானது. இச்சங்கத்தின் நான்காம் வருஷ மஹோற்சவ அறிக்கைப் பத்திரத்திற்கும் ஆறாம் வருஷ மஹோற்சவ அறிக்கைப் பத்திரத்திற்கும் இடையில் மிகப்பெரிய வித்தியாசம் கண்கூடாகத் தென்படுகின்றது.

நான்காம் வருஷக்கூட்டத்தின் அறிக்கை, அதுவரை சங்கம் மிகுந்த உற்சாகத்தோடும் ஆர்வத்தோடும் நடைபெற்று வந்ததைத் தெரிவிக்கிறது. சங்கம் அதீதமாக வினையாற்றிச் செயல்பட்ட காலத்தில் (1905-நவம்பர் இதழில்) பண்டிதரின் மகளான மரகதவல்லி அம்மையார் 'முயற்சி' என்றொரு கட்டுரை எழுதி வெளியிட்டமையும் இங்குக் கருதுதல் தகும். (இதுபற்றிய விவரங்களுக்கு கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் பிப்ரவரி இதழைப் பார்க்க). கருணாநிதி இல்லத்து சாலமன் என்பவரும்

‘கைத்தொழில்’ என்றொரு கட்டுரை வரைந்துள்ளார்.

ஆனால் ஐந்தாம் வருடத்திற்குப் பின்னர் சங்கம் சரிவர நடைபெற இயலாமல் பல இடையூறுகளைச் சந்தித்து மிகவும் ஊக்கமும் பொருளும் குன்றிப்போய் வருந்தியுள்ளது. பொருள் நலிவால் 1906-செப்டம்பர் முதல் 1907-மே வரை ஒன்பது மாதங்கள் இதழைக்கூட நடத்தமுடியாமல் அல்லற்பட்டது. நடத்திவந்த கலாசாலையையும் மூடிவிட்டது. சங்கத்தின் வரவு செலவு கணக்கு பற்றிய விபரத்தைக்கூட ‘இவ்வருஷத்தில் வரும்படியுமில்லை. செலவுமில்லை. சில சில்லரைச் செலவுகள் ஈசனருளால் எப்படியோ நடந்து வருகின்றன’ எனப் படிப்போர்க்குத் மிகுந்த கலக்கத்தையும் பரிதாபத்தையும் உண்டாக்கும் உணர்வோடு வெளியிட்டுள்ளது. இப்படிச் சங்கம் சரிவர நடைபெறாமல் போனதற்குக் காரணம் பல தனவான்களின் உதவி கிடைக்காமல் போனதும், சங்கத்தாரின் ஊக்கக் குறைவுமே எனக் கூறி, தமிழபிமானிகளிடம் பகிரங்கமாக மன்னிப்பையும் கோரியது.

இப்படி அழிவின் விளிம்பில் துயராடிய சங்கத்திற்கு ஊக்கமும் பொருளும் அளித்து எப்படியேனும் தமிழ்ச்சங்கத்தைக் காப்பாற்றிவிட வேண்டும் என்னும் நன்னோக்கத்தோடு அக்காலத்தில் ஆபிரகாம் பண்டிதர் செயல்பட்டிருக்கின்றார். இது பற்றி ஆறாம் வருஷக்கூட்ட அறிக்கை,

‘சென்ற வருஷத்தில் எங்கள் கடமைகளை எங்களுக்கு வற்புறுத்திக் காட்டிக் கொண்டு வந்தவர்களை நாங்கள் மனதாறத் துதிக்கின்றோம். இவ்விதம் எங்களுக்கு உற்சாக மூட்டி வந்தவர்களில் ஒருவர் ஹரித்துவாரமங்கலம் தமிழபிமானியாகிய V. கோபாலசுவாமி ரகுநாதராஜாளியார் அவர்கள், மற்றுவேறு அபிமானிகள் மகா-ரா-ஸ்ரீ M. அப்பிரஹாம் பண்டிதரவர்கள், ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைசாமித் தேவர் அவர்கள், எங்கள் அக்கிராஸநாதிபதியார் மகா-ரா-ஸ்ரீ சாமிநாத விஜயதேவரவர்கள் முதலியவர்கள்’ என்று கூறியது. பின்பு வருஷாந்தர மகோற்சவத்தை நடத்தி வைத்தவர்கள் பற்றிக் குறிப்பிடுகையில், தஞ்சைக் கருணாநிதியாகிய M. அம்பிரஹாம் பண்டிதர் அவர்கள் என்று அவரது பெயரை நன்றியுணர்வோடு பதிவு செய்துள்ளது.

தமிழ்ச்சங்கம் ஒன்று வீழ்ந்து விடாமல் காப்பதற்குத் தன் வீட்டு மக்களை விஷய தானம் செய்வித்தும், தான் ஊக்கமும் பொருளும் கொடுத்து உதவியும் எனப் பல்வகையானும் நல்லுபகாரங்களையே செய்ய முனைந்த பண்டிதரின் செயல்பாடுகள் இத்தொடர்ச்சியில் போற்றத்தக்கதாய் விளங்குகின்றன.

### கரந்தைத் தமிழ்ச் சங்கம்

பண்டிதர் வாழ்ந்த தஞ்சையில் ‘செந்தமிழ்ப் புலவர்’ தமிழவேள் உமாமகேசுவரனாரின் தலைமையில் இயங்கியது ‘கரந்தைத் தமிழ்ச் சங்கம்’. 1911-ஆம் ஆண்டு இச்சங்கத்தை நிறுவிய துங்கன் உமாமகேசுவரனாரின் சகோதரர் திரு. வே. இராதாகிருட்டின பிள்ளை என்பவர். பண்டிதரின் சமகாலத்தில் வாழ்ந்த பெரும் தமிழறிஞர்களான ந. மு. வேங்கடசாமி நாட்டார், கா. நமச்சிவாய முதலியார், கா. சுப்பிரமணியப் பிள்ளை, தி. செல்வகேசவராய முதலியார் முதலானவர்களைக் கொண்டு அருந்தமிழ்ப்பணி புரிந்து வந்தது. செந்தமிழ்க் கைத்தொழில் கல்லூரி ஒன்றும் நூல் நிலையமும் இச்சங்கத்தால் நிறுவப்பட்டு இயங்கி வந்தன. நூல் நிலையத்திற்குப் பல தமிழறிஞர்களும் கொடையுள்ளம் கொண்டவர்களும் புத்தகங்களைக் கொடுத்து உதவியுள்ளனர். அச்செய்தி ஆண்டுதோறும் அச்சங்கத்தின் வாயிலாக வெளியிடப்படும் அறிக்கைகளில் சேர்க்கையாக, ‘புத்தகங்கள் உதவியவர்களின் விவரம்’ என்னும் பகுதியில் இடம்பெறும். அதில் புத்தகம் உதவியவர்களின் பெயர், ஊர், புத்தக எண்ணிக்கை ஆகியவையும் இணைத்து வெளியிடப்படும்.

அவ்வகையில் 1919-ஆம் ஆண்டு வெளியான ஏழ், எட்டாம் ஆண்டுகளின் அறிக்கையில், புத்தகங்களை உதவியதாக இராவ்சாஹீப் M. ஆபிரகாம் பண்டிதரின் பெயர் இடம்பெற்றுள்ளது. 1918-ஆம் ஆண்டில் (காலயுக்தி) அச்சங்கத்திற்கு 5 புத்தகங்களை உதவியிருக்கின்றார். ஆனால் இன்ன நூல்களைத்தான் வழங்கினார் என்பதற்கான எவ்வித சான்றாதாரங்களும் இல்லை. புத்தகம் உதவிய அடுத்த ஆண்டே (1919-இல்) மறைந்துவிட்ட ஆபிரகாம் பண்டிதரைக் குறித்து ஒன்பதாம் ஆண்டின் அறிக்கை மிகுந்த துயரத்தோடு அவரது இழப்பை அனுசரித்துள்ளது.

‘பேரறிவாளரும், நற்றமிழன்பரும், பெருங்கொடை வள்ளலும், நம் சங்கப்பற்றுடையவரும் ஆகிய ராவ்சாஹீப் திரு மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களை இழந்தது நம் தமிழ் நாட்டிற்கே ஓர் பேரிழப்பென்னலாம். பல வழிகளிலும் அவர்களிடமிருந்து பல உதவிகளையும் எதிர்பார்த்திருந்த எம் ஏமாற்றத்தையும் துயரையும் என்னென்போம்.’

என்று பதிவிட்டிருப்பது பண்டிதர்மீது கரந்தைத் தமிழ்ச்சங்கம் வைத்திருந்த அபாரமான நம்பிக்கையைக் காட்டுகிறது. நம்பிக்கை தவறியதன் பின்பாக ஏற்படும் பதற்றத்தில் வெளிப்படும் சொற்களாகவே இக்கையறு நிலையுரை அமைந்திருக்கின்றது. மேலும் 1920-ஆம் வெளியான இவ்வறிக்கை பண்டிதரின் லாலி எலக்டிரிக் அச்சுக்கூடத்திலேயே அச்சாக்கப்பட்டுள்ளமையும் இவண் குறிப்பிடத்தகுந்தது.

### புலிசை வாணி விலாச சபை

“புலிசை அருளகத்தில் ஒரு கழகம் ஏற்படுத்த வேண்டும் என அடிகளார் விரும்பிக்கொண்டிருந்தார். 1903 ஆம் ஆண்டு (சோபகிருது ஆண்டு) பாண்டித் துரைத்தேவர் மீண்டும் ஒரு முறை புலிசை ஞானியார் அருளகத்திற்கு வருகை புரிந்தார். அவர் தலைமையிலேயே ‘வாணி விலாச சபை’ என்னும் கழகத்தை அடிகளார் நிறுவினார்” என்று சுந்தரசண்முகனார் தமது “ஞானியார்அடிகள்” நூலில் பதிவு செய்கிறார்.

தமிழுக்குப் புத்துயிர் கொடுத்து ஆங்கில மோகத்தைத் தவிர்க்க வேண்டும் என்னும் எண்ணத்தோடு ஞானியார் அடிகள் என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட திருப்பாப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளால் தொடங்கப்பட்டது வாணி விலாச சபை. இச்சபை பாண்டித்துரைத் தேவர், உ.வே. சாமிநாத ஐயர், ப.வே. மாணிக்க நாயக்கர், கோ. வடிவேலு செட்டியார், ரா.பி. சேதுப் பிள்ளை முதலிய பேரறிஞர்கள் வந்து தலைமை தாங்கி, சொற்பொழிவும் ஆண்டு விழாக்களும் கொண்டாடப்பட்ட பெருமையையும் உடையது. அவ்வகையில்

இச்சபையின் மூன்றாம் ஆண்டுவிழாக் கொண்டாட்டம் 1907 அக்டோபர் 13-ஆம் நாள் வெகுவிமரிசையாக நடைபெற்றுள்ளது. புலியூர் ஞானியார் மடத்தில் நடைபெற்ற அக்கூட்டத்திற்குச் சைவ சித்தாந்தப் பேரறிஞரான ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை தலைமை தாங்கியிருந்தார். அப்போது ஞானியார் மடாலயமே ஜமீன்தார், மாவட்ட துணை ஆட்சியர் முதலான பெரும் கனவான்களால் சூழ்ந்திருந்தது. அக்கனவான்களுள் தஞ்சை ஆபிரகாம் பண்டிதரும் ஒருவர் என்பது வியப்பையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.


'The third anniversary of this useful institution was celebrated with great eclat on 13th Oct last under the presidency of Mr. J.M. Nallaswami Pillai. Avl. The Hall of Gnaniar Matam was crowded and amog them were present Mr. V. Sankaraiah Naidu, Zemindar, Rao Bahadur M. Arumugam Pillai, Dy. Collector, Rao Bahadur Mariappa Moodaliar, District Registrar, Mr. Abraham Pandithar of Tanjore."

இச்செய்தி வெளியானது ஜெ.எம். நல்லசாமிப் பிள்ளை நடத்திய 'சித்தாந்த தீபிகை' (The Siddhanta Deepika) என்னும் ஆங்கில மாத இதழில். 1907-ஆம் ஆண்டு நவம்பர் மாத இதழில் வெளியான இச்செய்தி பண்டிதரின் பங்கேற்பைப் பற்றி மட்டுமே தகவலளிக்கின்றது. வேறு எந்தச் சிறப்பான குறிப்பும் இல்லை. எனினும் அக்காலச் சூழலில் சைவ அடியாரால் உருவாக்கப்பட்டதொரு சபையில், சைவ சித்தாந்த அறிஞர் தலைமை தாங்கிய கூட்டத்தில் கிறித்தவரான ஆபிரகாம் பண்டிதர் கலந்துகொண்ட நிகழ்வே வரலாற்றில் பெருஞ்சுவடு. இசையால் உலகறியும் முன்னரே, இராவ்சாகிப் என்னும் பட்டம் பெறும் முன்னரே அவரது புகழ் தமிழகத்தில் பரவியிருந்ததையும் சமயம் கடந்தும் தமிழ்மீது அவர் கொண்டுள்ள அபிமானத்தையுமே இப்பதிவு நமக்கு காட்டுகின்றது.

பின்னாட்களில் இசையாராய்ச்சி செய்து வெளியிட்ட தமது பெருநூலின் பாயிரப் பகுதியில் முகப்பிலேயே, 'திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்து ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய வாழ்த்துரை' என்று ஞானியாரடிகளின் உரையையே முதலில் கொடுத்துள்ளார். பண்டிதரின் சங்கீத வித்யா மகாஜன சங்கத்தை ஆதரிப்பவராக ஞானியாரடிகளும், சகாயராக ஜெ. எம். நல்லசாமிப் பிள்ளையும் இருந்துள்ளனர் என்னும் தகவலையும் தமது நூலுள் பதிவு செய்யத் தவறவில்லை. இவ்வாறு ஆண்டுவிழாக் கூட்டத்தில் கலந்துகொண்டது, பாயிரத்தின் முகப்பில் ஞானியாரடிகளின் வாழ்த்துரையை அமைத்தது என்பதிலெல்லாம் பண்டிதரின் சமயப் பற்றற்ற சமத்துவ உள்ளத்தையே நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இப்படித் தமிழோடும் தமிழ் அறிஞர்களோடும் ஆபிரகாம் பண்டிதர் கொண்டிருந்த பற்றும் உறவும் தமிழ் மக்களால் கட்டாயம் அறிந்துகொள்ளப்பட வேண்டியவை. இசைக்காகவும் மொழிக்காகவும் தமது கடைநாள் வரையிலும் உற்றுழி உதவி புகழ் வாழ்வு வாழ்ந்து மறைந்தவர் இராவ்சாகிப், தஞ்சை மு. ஆபிரகாம் பண்டிதர். தொட்ட இடமெல்லாம் துலங்க, காலூன்றிய துறைகளெல்லாம் விளங்க தம் அருந்திறத்தினாலும் நுட்பமான சிந்தனைகளாலும் மாண்புடைய வினைகளினாலும் தடம் பதித்தவர். இசைத்துறையில் மட்டுமின்றி தமிழ் நெடும்பரப்பிலும் எண்ணிப் பார்க்கத்தக்க பங்களிப்பினைச் செய்துள்ள பண்டிதரின் அரும்பணிகளும் அயராத செயல்பாடுகளும் தமிழ் மக்களால் என்றும் அறியவேண்டியன; நினைக்கத்தக்கன; போற்றற்பாலன.

இம்மாதம் 2-ஆம் தேதி ஆபிரகாம் பண்டிதரின் பிறந்ததினம். 31-ஆம் தேதி நினைவுதினம்.




THE VANI VILASA SABHA OF TIRUPAPULIYUR. 248

**THE VANI VILASA SABHA OF TIRUPAPULIYUR.**

*The 3rd Anniversary Celebration.*

The third anniversary of this useful institution was celebrated with great eclat on 13th Oct last under the presidency of Mr. J. M. Nallaswami Pillai. Avl. The Hall of Gnaniar Matam was crowded and among them were present Mr. V. Sankariah Naidu, Zemindar, Rao Bahadur M. Arumugam Pillai, Dy. Collector, Rao Bahadur Mariappa Moodaliar, District Registrar, Mr. Abraham Pandithar of Tanjore. Mr. Subroyalu Reddiar. Municipal Chairman, Mr. Ponnusami Mudaliar, English Head Clerk of the Collector's office, and other leading Vakils and citizens. The proceedings were begun by the chanting of Devara Hymns and then the report was read by the Secretary Mr. Kuppusami Chettiar which




சேர்க்கை உ.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

பிங்கள, காலயுத்தி யாண்டுகளில் புத்தகங்கள் உதவியவர்களின் விவரம்.

| | | பிங். | கால. |
|---|---|---|---|
| க | கரந்தைத் தமிழ்ச் சங்கம், (விலைக்கு வாங்கியனவும் பிறவும்) | 7 | 7 |
| உ | திரு. V. கோவிந்தசாமி நாயுடு அவர்கள், கரந்தை. | 26 | ... |
| ந | T. N. வேங்கடசாமி நாயுடு ,, B. A., தருமாவரம் | 17 | ... |



298 கடவுள் துணை.

தஞ்சைத் தமிழ்ச்சங்கத்து ஆறும் வருஷ மஹோற்சவ அறிக்கைப் பத்திரம்.

அக்டோபர்மீ 16உ விஜயதசமி

1907.

ஐந்தாம் வருஷமஹோற்சவம் நடந்தேறியபின்னர் நமது தமிழ்ச்சங்கத்தின் விருத்திக்கு அனேக இடையூறுகள் உண்டாயின. நாங்களும் ஊக்கத்தில் கொஞ்சம் குறைந்திருந்தோம். இடையூறுகளை அப்பப்போது விலக்கிக்கொள்ளவில்லை. ஆனபடியினால் இந்த வருஷத்து அறிக்கைப்பத்திரம் எங்களுடைய பொறுப்பான கடமைகளை நாங்கள் மனப்பூர்த்தியாய்ச் செய்யவில்லை என்று தெரிவிக்கும். தமிழபிமானிகளான நீங்கள் எங்களை மன்னிப்பீர்களென்று நம்புகிறோம்.

சென்ற வருஷத்தில் எங்கள் கடமைகளை எங்களுக்கு வற்புறுத்திக் காட்டிக்கொண்டுவந்தவர்களை நாங்கள் எங்கள் மனதாறத் துதிக்கின்றோம். இவ்விதம் எங்களுக்கு உற்சாக மூட்டி வந்தவர்களில் ஒருவர் ஹரித்துவாரமங்கலம் தமிழபிமானியாகிய

அ. யோசுவா ராபின்சன்

மாங்குளம்

# ஹன்னா மார்ஷ்மேன் செராம்பூர் மிஷனின் தூண்



இன்று, பெரும்பாலான கிறிஸ்தவர்கள், மிஷனரி பணிகளின் வரலாற்றில் வில்லியம் கேரியின் முக்கியத்துவத்தை அறிந்திருக்கிறார்கள். அவரது நெருங்கிய தோழர்களான ஜோசுவா மார்ஷ்மேன் மற்றும் வில்லியம் வார்டு ஆகியோரின் பணிகளையும் பலர் அறிந்திருக்கிறார்கள். இந்த மூவரும் பொதுவாக 'செராம்பூர் மூவர்' (Serampore Trio) என்று அழைக்கப்படுகின்றனர். ஆனால், அந்த செராம்பூர் மிஷனில் தூணாக செயல்பட்ட ஹன்னா மார்ஷ்மேனை பற்றி பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை. 'ஹன்னா மார்ஷ்மேன் இந்தியாவிற்கு வந்த முதல் பெண் மிஷனரி ஆவார்.' செராம்பூர் மிஷனில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட ஹன்னா சுமார் 47 ஆண்டுகள் கடவுளுக்கு சேவை செய்தார். ஹன்னா மார்ஷ்மனை பற்றியும், செராம்பூர் மிஷனில் அவரது பணிகளை பற்றியும் விரிவாக கீழே காண்போம்.

> “ஹன்னா மார்ஷ்மேன் இந்தியாவிற்கு வந்த முதல் பெண் மிஷனரி”

## இளமைப் பருவம்

ஹன்னா மே 13, 1767 இல் ஜான் ஷெப்பர்ட், மற்றும் ரேச்சல் கிளார்க் ஷெப்பர்ட் என்ற தம்பதியருக்கு மகளாக பிறந்தார். ஹன்னாவிற்கு எட்டு வயது ஆகிய போது அவரது தாயார் ரேச்சல் இறந்துவிட்டார். அவரது தாயாரின் இறப்பு அவருக்கு மிக பெரிய வேதனையை அளித்தது. அதே வேளையில் ஹன்னாவின் தகப்பனார் ஜான், அவரது மனைவி இறந்த இழப்பினை தாங்கிக்கொள்ள முடியாமல் நோயுற்று அவரும் மரித்துவிட்டார். இந்த சூழ்நிலையில், ஹன்னா அவரது தாய்வழி தாத்தாவுடன் வில்ட்ஷயர் என்ற இடத்திற்கு குடிபெயர்ந்தார். அங்கு சென்ற பின்பு ஹன்னா மிகவும் பலவீனமாகி நோயுற்றார், அந்த சமயத்தில் தான் கடவுளின் அன்பினை ஹன்னா புரிந்துகொண்டார், உடனடியாக தன்னை கடவுளின் பாதத்தில் அர்ப்பணித்து ஜெபித்து வந்தார். சுமார் மூன்று வருடங்களுக்கு பின்பு கடவுள் ஹன்னாவிற்கு பூரண சுகத்தை கொடுத்தார். இதன் பின்னர் ஹன்னா ஞானஸ்நானம் பெற்று, இயேசு கிறிஸ்துவை தனது சொந்த ரட்சகராகவும், மற்றும் பெற்றோராகவும் ஏற்றுக்கொண்டு வாழ தொடங்கினார்.

## திருமண வாழ்வு

ஹன்னா 1791 ஆம் ஆண்டு ஜோசுவா மார்ஷ்மேனை மணந்தார். ஹன்னா மற்றும் ஜோசுவா தம்பதியருக்கு 12 குழந்தைகள் பிறந்தனர், ஆனால் அதில் பல குழந்தைகள் பிறந்த உடனே இறந்தனர்.

## கடவுளின் பணிக்கு அழைப்பு

நவீன மிஷனரி பணிகளின் தந்தை (Father of Modern Missions) என்று அழைக்கப்படும் வில்லியம் கேரி 1793 இல் இந்தியாவிற்கு வந்து டென்மார்க் காலனியான செராம்பூரில் பாப்டிஸ்ட் மிஷனரி சொசைட்டியின் கீழ் பணிபுரிந்தார். கேரி மேலும் மிஷனரிகள் தேவை இருப்பததாகவும் உடனடியாக இந்தியாவிற்கு மிஷனரிகளை அனுப்புமாறும் இங்கிலாந்திற்கு கடிதம் எழுதினார். வில்லியம் கேரியின் பணியில் உதவுவதற்காக ஹன்னாவின் கணவருக்கு இந்தியாவுக்குச் செல்ல அழைப்பு வந்தபோது, ஹன்னா சற்று தயங்கினார். இறுதியாக கடவுளின்

மேல் பாரத்தை போட்டு விசுவாசத்தோடு இந்தியாவிற்கு ஜோசுவா மார்ஷ்மேன் ஹன்னா மார்ஷ்மேன் மற்றும் அவர்களது இரண்டு குழந்தைகள் உட்பட குடும்பமாக கடவுளுக்கு ஊழியம் செய்ய மே 1799 இல் உற்சாகமாக கிளம்பினார்கள்.

## இந்தியாவில் ஹன்னா மார்ஷ்மேன்

ஹன்னா, மற்றும் ஜோசுவா போர்ட்ஸ்மவுத்தில் இருந்து இந்தியாவிற்கு க்ரிடீரியன் என்ற கப்பலில் புறப்பட்டனர். கர்ப்பமாக இருந்த ஹன்னாவுக்கு 20 வார பயணம் கடினமாக இருந்தது. அவர்கள் அக்டோபரில் வந்து டென்மார்க் காலனியான செராம்பூரில் தங்களை கடவுளின் ஊழியத்திற்கு அர்ப்பணித்து, கடவுளுக்காக ஊழியம் செய்ய தொடங்கினார்கள்.


## குடும்பப் பொறுப்பில் ஹன்னா

செராம்பூரில் ஹன்னா முதன் முதலில் செய்த பணி மிஷனரிகளின் குடும்பத்தை கவனிப்பதே ஆகும். ஏனென்றால் வில்லியம் கேரி அதிக நேரத்தை ஊழியத்தில் செலவிட்டதால் குடும்பத்தை கவனிக்க முடியவில்லை, கேரியின் மனைவி டோரதியும் மன நலம் பாதிக்கப்பட்டிருந்தார். எனவே ஹன்னா முதலில் மிஷனரிகளின் குடும்பத்தில் உள்ள குழந்தைகளையும், மற்றும் கேரியின் மன நலம் பாதிக்கப்பட்ட மனைவியையும் கவனித்துக்கொள்ள முன் வந்தார்.

## பெண்களுக்கு கல்வி

ஹன்னா குடும்பத்தை கவனித்துக்கொள்ளும் பொறுப்பில் இருந்தாலும், மிஷனரி பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். மே மாதம் 1800 ஆம் ஆண்டு இரண்டு ஆங்கில பள்ளிகளை தொடங்குகிறார் ஒன்று ஆண்களுக்கு




மற்றொன்று பெண்களுக்கு. அந்த பள்ளியின் மூலம் வரும் வருவாயை வைத்து இந்திய மாணவர்களுக்கென்றும் ஒரு இலவச பள்ளியை தொடங்கினார். ஹன்னா பெண்களுக்கென்று தொடங்கிய இந்த இலவச பள்ளி தான் இந்தியாவில் முதன் முதலில் பெண்களுக்கென்று தொடங்கப்பட்ட இலவச பள்ளி என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கு கல்வி அளிப்பது என்பது ஹன்னாவின் அதீத விருப்பமாக இருந்தது. 'என்னைப் பொறுத்தவரை, குழந்தைகளுக்குக் கற்பிப்பதைப் போன்ற மகிழ்ச்சியான வேலை எதுவும் இல்லை, ' என்று அவர் தனது சுயகுறிப்பில் எழுதியுள்ளார். பெண்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் கொண்டு வர பல முயற்சிகளையும் ஹன்னா மேற்கொண்டார். இறுதியில், ஹன்னா செராம்பூரில் பன்னிரண்டு பெண்கள் பள்ளிகளை நிறுவினார். செராம்பூர் மிஷனரிகள் நாடு முழுவதும் பள்ளிகளை நிறுவ ஹன்னாவின் முயற்சி உதவியாக இருந்தது . (1818 வாக்கில், சேரம்ப்பூ மிஷனரிகளால் சுமார் 126 பள்ளிகள் நிறுவப்பட்டது).

## முடிவுரை

செராம்பூர் மிஷனில் தன்னை ஈடுபத்திக்கொண்ட ஹன்னா பல பணிகளை பெண்களுக்கென்று முக்கியத்துவம் கொடுத்து செய்தார். தனது கணவரோடு இணைந்து இந்திய மக்களுக்காக பல தியாகங்களையும் செய்த ஹன்னா மார்ச் 5, 1847 இல் கர்த்தருக்குள் நித்திரையைடந்தார். அவரது உடல் செராம்பூரில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. ஹன்னாவை போன்ற பெண்கள் நமது இந்தியாவிலும் எழும்ப வேண்டும், பெண்களின் கல்விக்கு மட்டும் இன்றி அவர்களது பாதுகாப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்து செயல்பட வேண்டும்.



# CHS -LIBRARY RESEARCH AND DEVELOPMENT CENTRE

*"Remember the days of old; consider the years of many generations; ask your father, and he will show you, your elders, and they will tell you"*

*(Deut. 32:7 ESVA).*

*We, the People of God are exhorted to keep alive the memory of our faith history and pass it on to our sons and daughters. The Christian Historical Society endeavours to help Tamil-Christian community to fulfill this noble obligation.*

***All praise and glory be to God!***

***Shalom Greetings to you in the name of our Lord and Saviour Jesus Christ!***

*The Christian Historical Society (=CHS) is the fruit of the diligent efforts of numerous Tamil-Christian historians who in the light of Deuteronomy 32:7 seek to document as well as write the faith history of Tamil-Christian community with the active involvement of numerous young volunteers. To cover wider areas where our community has its roots, collaborations are underway with historians and like-minded individuals throughout Tamil Nadu.*

*By God's grace and with prayerful support of Friends, CHS has initiated several activities towards realising its objectives during the past five years since inception. The important ones being:*

- *Publication of the monthly magazine, Kristhava Varalaatru Suvadugal*
- *Reprinting books which contain historical accounts of Tamil-Christian community*
- *Compilation and digitalising of antiquarian texts and documents*
- *Organising Mission Tours to places of historical importance*
- *Establishment of a Library with space for Museum, Research, Seminars etc.*

*Currently, with the benevolent donation of land by a Friend, God has enabled CHS to start the building project for Library cum Research & Development Centre at Surandai. Few individuals are donating and have promised to donate portion of construction material. We need to buy remaining construction material and furnishings for the Library and Seminar Hall.*

*We cordially invite families, individuals and organisations to contribute generously to complete the momentous library building, God willing by June 2024.*

*In God's mission,*

*Manna Selvakumar*
*+91 9176780001*

முனைவர்.ஜான்சி பால்ராஜ்

நாவலாசிரியர், திருநெல்வேலி
+91 73971 56808

# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

வரலாற்றுக் நெடுந்தொடர் –27

டோனாவூரிலிருந்து வடமேற்கே ஐந்து மைல் தொலைவில் உள்ளது களக்காடு என்ற ஊர். முற்காலத்தில் களா மரங்கள் நிறைந்த காட்டுப் பகுதியாக இருந்தமையால் அப்பகுதி, களக்காடு என்று அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவ்வூர் சேரன்மகாதேவி, வள்ளியூர் சாலையின் நடுவில் இயற்கை எழில் கொஞ்சும் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. அப்பகுதியில் வீடு ஒன்றை வாங்கி அங்கிருந்து அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் ஏழை எளியோருக்கு சேவை செய்ய விரும்பினார் ஏமி.

ஏற்கெனவே டோனாவூருக்கு அருகில் உள்ள ஏர்வாடி என்ற ஊரிலும் இதே நோக்கத்துடன் சேவையாற்றி வந்தார். இதன்மூலம் ஏமியின் காப்பகத்தில் வளர்ந்த கைவிடப்பட்ட குழந்தைகளை அப்பகுதியில் வாழ்ந்தவர்களுள் குழந்தை இல்லாதவர்கள் மற்றும் சேவை மனப்பான்மை உடைய செல்வந்தர்களும் தத்தெடுத்து வளர்ப்பதற்கும் ஏதுவாக அமைந்தது. எனவே களக்காட்டிலும் அவ்வாறே தனது சேவையை விருத்தியாக்கத் திட்டமிட்டார்.

ஆனால் களக்காட்டில் வீடு அமைவதற்கு நாட்கள் பிடித்தன. வெகு நாட்களுக்குப் பிறகு பல்வேறு எதிர்ப்பின் மத்தியில் ஒரு வீடு கிடைத்தது. அந்த வீட்டையும் ‘இதுபேய் வீடு; அந்த வீட்டில் குடியிருக்க முடியாது’ என்று அங்கிருந்த மக்கள் பயமுறுத்தியும், அந்த வீட்டை வாங்கிவிடாதபடி தடைகளை ஏற்படுத்தியும் வந்தனர். வேற்று மதத்தினர் என்பதால் மட்டுமின்றி ஏமியின் தேவதாசிமுறை எதிர்ப்பை அறிந்திருந்ததாலும் எதிர்ப்பு வலுத்தது. அவ்வீட்டைச்சீரமைப்பதற்கான பணிகளில் ஈடுபட்டார் ஏமி. அன்று மாலை மூன்று மணியளவில் ஏமி, நவினயா, ப்ரீனா, சுகந்தி, பொன்மலர் ஆகியோரை உடன் அழைத்துக்கொண்டு அந்த வீட்டைப் பார்த்து வருவதற்காக வில்வண்டியில் களக்காட்டிற்குச் சென்று கொண்டிருந்தார். வழிநெடுக... களக்காட்டைச் சுற்றிலும் அமைந்துள்ள கிராமங்களைப் பற்றின செய்திகளையே பேசிக் கொண்டு சென்றனர்.

‘களக்காட்டிலேயே என்னைக் கவர்ந்த ஒன்று அங்குள்ள பெரிய கோவில் தான்’ என்றார் ஏமி. வண்டியோட்டி ராமசாமி திரும்பி பார்த்து புன்னகைத்தான். ‘அந்தக் கோவில் ஊரின் நடுவில் இருக்கு. ‘கோமதியம்மை உடனுறை சத்தியவாகீசுவரர் திருக்கோயில்‘ என்ற பெயரில்; மிகவும் பெரியதாக இருப்பதால் பெரியகோயில் என்கிறார்கள்’ என்றார் ஏமி.


‘அம்மா, நான் அடிக்கடி இந்தக் கோவிலுக்குச் செல்வேன். உள்ளே ரொம்ப அழகான சிற்பங்களும், ஓவியங்களும் இருக்கு. நீங்க பார்த்தால் அசந்து போவீர்கள்’ என்றான் ராமசாமி.

‘ஆமாம் உவாக்கர் ஐயாவும் அவரது மனைவியும் இங்கு இருக்கும் போதே நாங்கள் மூன்றுபேரும் அந்தக் கோயில் முழுவதையும் சுற்றிப்பார்த்திருக்கிறோம். வீரமார்த்தாண்டவர்மன் என்ற மன்னன் வந்து இக்கோவிலில் திருப்பணிகள் செய்திருக்கிறார். அதன் அடையாளமாக அவரது சிற்பமும் கருவறைக்கு முன்னால் உள்ள மணிமண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. அத்தோடு தின்னவேலியில் உள்ள நெல்லையப்பர் கோவிலில் உள்ளதைப்போன்றே இங்கும் மிகப்பெரிய இசைத்தூண்கள் உள்ளன. அவற்றை மரக்குச்சிகளால் தட்டி ஒலி எழுப்பி 21ஸ்வரங்களையும் உண்டாக்கி காட்டினார். அங்கிருந்த இசைக் கற்ற ஒருவர். நாங்கள் அசந்து போனோம். கல்லையே வளைத்துத் தகடுகளாக்கி அந்தக் கல்லில் உருட்டுக் கம்பு, நாற்கோணப்பட்டை, அறுங்கோணப்பட்டை, சதுரம், முக்கோணப்பட்டை போன்றவற்றால் செதுக்கி கல் தச்சர்கள் தங்கள் கைவண்ணத்தைக் காட்டியுள்ளனர். அப்பப்பா.. இந்தியர்களின் திறமை அபாரம்’ என்றார் ஏமி.

அனைவரும் அவரது வர்ணிப்பை நேரில் அவற்றைக் கண்டு வியந்ததைப் போல ஆவலோடு கவனித்தனர். ‘எங்களையும் ஒருமுறை அங்கு கூட்டிச் செல்லுங்கள் அம்மா’ என்றாள் ப்ரீனா. ‘கண்டிப்பாக செல்வோம், எத்தனைமுறை பார்த்தாலும் சலிக்காது’ என்றார் ஏமி புன்னகையோடு.

‘ஆனால் கோவிலின் வெளியே கோவிலிலிருந்து கீழ் நோக்கிய தெரு முழுவதும் மாடத்தெரு என்று அழைக்கப்படும் தேவதாசியர்கள் வசிக்கும் தெருவும் இருந்தது.. . !’ என்று சோகம் நிறைத்த பெருமூச்செறிந்தார். ‘அவர்கள் அந்தக் அக்கோவிலுக்கு பணிவிடை செய்வதற்காம்.. !!’ என்றும் கூறி முடித்தார்.

ஐந்து மணிக்கெல்லாம் அங்கு சென்று சேர்ந்தனர். அந்த வீடு தனியாக இருந்தது. அருகில் வேறு வீடுகள் எதுவும்



இல்லை. அதைச் சுற்றி ஒன்றிரண்டு வேப்ப மரங்களும் புளிய மரங்களும் இருந்தன. யாரோ எப்போதோ இளம் வயதில் ஒருவர் தற்கொலை செய்து இறந்து விட்டதாகவும் அதன் பிறகு அதே வீட்டில் தொடர்ந்து சிலர் எதிர்பாராத விதமாக மரணம் சம்பவித்ததாகவும் கூறப்பட்டது. எனவே அந்தவீடு யாரும் கேட்பாரற்றுக்கிடந்தது. ஏமிக்கு பேய் பிசாசுகளில் எல்லாம் பயப்படுபவர் அல்ல. சில வேளைகளில் அநீதிக்கும் நீதிக்கும் வேறுபாடு தெரியாமல் செயல்படும் மனிதர்களால் தனது நீதி புறந்தள்ளப்படும்போது, அவர்களது அறியாமையை நீக்கும் வழியின்றி ஒருவித பயத்தால் தடுமாறியதுண்டு. அத்தகையோரைவிட பெரிய பேய்கள் உலகத்தில் இருப்பதாக அவர் கருதவில்லை. தனது சகப்பணியாளர்களையும் அத்தகைய மனத்திடத்தோடே உருவாக்கியிருந்தார் அவர்.

'அம்மா.. . நமது புதியவீடு அழகாக வெள்ளையெல்லாம் அடிச்சு, கம்பீரமாக நிற்குது பாருங்க. 'என்றாள் வண்டியிலிருந்து இறங்கும் முன்னரே பொன்மலர். ..ம்.. ம்.. ஆமா' என்ற ஏமி, 'பார்த்து கவனமாக இறங்குங்கள்' என்றார். கடைசியாக ஏமி கீழே இறங்கினார். வீட்டைச் சுற்றி வளர்ந்துநின்ற செடிக் கொடிகளெல்லாம் வெட்டப்பட்டு சுத்தமாக்கப்பட்டிருந்தது.

ஏமி மனத்திற்குள் கடவுளுக்கு நன்றி கூறி மகிழ்ந்ததை அவரது முகம் பிரதிபலித்தது. 'ஆஹா.. . நான் எதிர்பார்க்கவே இல்ல. இத்தனை அழகான இடமாக இருக்குமுன்னு. கடவுள் நமக்கு இவ்ளோ பெரிய கிருபையளித்திருக்கிறார்' என்றாள் சுற்றி



முற்றும் பார்த்தபடி.. . சுகந்தி. கண்ணுக்கெட்டிய தொலைவில் மேகமூட்டங்கள் தீண்டி விளையாடும் மலைகள். மழைவர ஆயத்தமாகி கொண்டிருந்தது வானம். ஈரக்காற்று வீசத்தொடங்கிய அந்த மாலையில்.. . . 'வீட்டைச் சுற்றி மரக்கன்றுகளும் பூச்செடிகளும் வைக்க வேண்டும். நம்மைத் தேடி வருபவர்கள் அமர்வதற்கு வசதியாக இருக்கைகள் அமைக்க வேண்டும்' என்று கூறிக்கொண்டே நடந்தார் ஏமி.

'சரிங்க அம்மா.. . இன்னும் ஒரு மாதத்தில் இதை ஒரு குட்டி பங்களாவாகவே மாற்றிறலாம்' என்றான் மூக்கையன். அந்த வீட்டைப் பராமரிக்கும் பணியை அவன்தான் செய்துவந்தான். மழைத் துளிகள் சடசடவென்று விழுந்தது. எல்லோரும் வீட்டிற்குள் சென்றனர். மழையை இரசித்தபடியே உள்பக்க வாசலருகில் ஏமி அமர்ந்திருக்க மற்ற அனைவரும் அவர் அருகில் அமர்ந்தனர். இடி மின்னலுடன் பெய்யத்தொடங்கிய மழை தொடர்ந்து மணி கணக்கில் பெய்தது.

'இன்று இரவு இங்கேயே தங்கி விடலாம் இதற்கும்மேல் நாம் மாட்டு வண்டியில் பயணிப்பது சரியாக எனக்குத் தோன்றல' என்று ஏமி கூற.. . 'ஆமாம்மா இங்கேயே இருப்பதுதான் சரி' என்றனர் எல்லோரும். 'சரிங்க அம்மா. நீங்க இனி எதற்கும் வெளியில் வர வேண்டாம். நான் ஊருக்குள்ள போய் மண்ணெண்ணை விளக்கும், தீப்பந்தமும் கிடைக்குதான்னு பார்த்துட்டு வந்துடுதேன்' என்றான் மூக்கையன். ஏமி பையிலிருந்த சில்லரைகாசுகளை எடுத்துக் கொடுத்து, பார்த்து நடங்க, வண்டியில இருக்க மழைத் தாளை எடுத்து மூடிட்டு போங்க. குடையும் இருக்கு, எடுத்துட்டுப் போங்க' என்றார் ஏமி. 'சரிங்கம்மா' என்ற மூக்கையனோடு வண்டியோட்டி ராமசாமியும் கிளம்பினான்.

இரவு முழுவதும் விடாமல் பெய்தமழையால் வீடு தண்ணீரால் சூழப்பட்டிருந்தது. விடிந்தும் மழைத் தூறல் இருந்து கொண்டே இருந்தது. இரவு தூக்கமின்றி வெகுநேரத்திற்குப் பிறகு தூங்கிய அனைவரும் விடிந்த பிறகும் தூக்கம் கலையாமல் படுத்திருந்தனர். ஏமி எப்போதும் போல நான்கு மணிக்கு எழுந்து ஜெபம் செய்துவிட்டு வெளியில் வந்தார். மரங்கள் அங்குமிங்கும் காற்றிலும் மழையிலும் உடைந்து கிடந்தன. சற்றுத் தொலைவில் நின்றிருந்த பெரிய மரத்தினடியல் வண்டியும் அருகில் மாடுகளும் கட்டப்பட்டிருந்தன. மரத்திலிருந்த பெருங்கிளையொன்று முறிந்து மாடுகளுக்கு நேரே தொங்கி கொண்டிருந்தது. 'காற்றில் அசைந்து அது கீழே விழுந்தால்.. மாடுகளின் மேல்தான் விழும்.

ராமசாமி.. . எங்கிருக்க.. . ? என்று கூப்பிட்டபடியே வேகமாக நடந்தார் ஏமி. அங்கு இலைத்தளைகளால் மூடப்பட்டுக் கிடந்த குழி ஒன்று மழைநீரால் நிரம்பி கிடந்ததை அறியாமல் வழுக்கி அதனுள் விழுந்தார் ஏமி. 'ஏசுவே.. . !' என்ற அவரது அலரல் சத்தம் கேட்டு எல்லோரும் எழுந்து ஓடி வந்தனர். இருபத்திநான்கு மணிநேரத்திற்குப் பிறகுதான் சுயநினைவிற்கு வந்தார் ஏமி. மருத்துவர்கள் சூழ்ந்து நிற்க கண் விழித்துப்பார்த்த ஏமி, தனக்கு நேரிட்டதை அறிந்து கொள்ள சிந்தித்துக்கொண்டிருந்தார். அசைக்க முடியாதளவு தனது கால் கட்டுப்போடப்பட்டிருப்பதை மெல்ல உணர்ந்தார்.

'மிஸ் ஏமி, இன்னும் ஒருசில மாதங்களில் உங்கள் கால் சீரடைந்துவிடும், குதிங்கால் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. சரிசெய்து விடலாம்.. . ' என்றார் மருத்துவர். 'மாதங்களா.. . !??' என்றுவியந்தஏமிக்குமீண்டும்தலைசுற்றியது; கண்ணயர்ந்தார்.. . ஆண்டுகள் பல ஆகும் என்பதை அறியாமலேயே.. . !!

**Rev.G. P.** இராஜா

**CSI.** பழனி நகர் குருசேகரம்

# அருள்திரு. டேவிட் காயிட் ஸ்கடர்
## *David Coit Scudder*

அருள்திரு. டேவிட் காயிட் ஸ்கடர், இவர் அமெரிக்கா நாட்டில் பாஸ்டன் என்ற நகரில் 1835ம் ஆண்டு அக்டோபர் 27ம் தேதி சார்லஸ் சாரா லேத்ரோப் ஸ்கடர் தம்பதிகளுக்கு மகனாக பிறந்தார். இவர் ஸ்கடர் வம்சத்தில் முதல் தலைமுறையில் கிறிஸ்துவுக்காக செயல்பட்டவர். சிறுவயதில் தன்னுடைய பெற்றோர்கள் கர்த்தருடைய வேத வசனத்தில் வளர்த்தார்கள். டேவிட் காயிட் ஸ்கடர் வேதத்திலும், ஜெபத்திலும், ஆலயப்பணிகளிலும், ஊழிய பணிகளை அதிக ஆர்வம் கொண்டவராக திகழ்ந்தார்.

### ஊழிய அழைப்பும் மற்றும் அர்ப்பணிப்பும்:

ஜான் ஸ்கடர் ஊழியத்தைப் பார்த்தும், அவர்களுடைய சொந்த ஊரில் ஸ்கடரின் குடும்பத்தில் கிறிஸ்துவுக்காக பணிகளை செய்த காரியங்களை பார்த்து டேவிட் காயிட் ஸ்கடர் கிறிஸ்துவுக்காக ஊழிய பணிகளை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டியது. ஜான் ஸ்கடர் 1855ஆம் ஆண்டு ஜனவரி 13ம் தேதி கர்த்தரின் மகிமையில் பிரவேசித்தார். டேவிட் 1861 பிப்ரவரி 25ம் தேதி அருட்பொழிவு பெற்ற இரண்டு நாட்களுக்கு பிறகு ஹரியிட் டட்டன் என்பரை திருமணம் செய்தார். டேவிட் காயிட் ஸ்கடர் திருமணமான இளம் வயதில் தன் மனைவியோடு தமிழ்நாட்டில் நற்செய்தி பணி ஜான் ஸ்கடரைப் போல் செய்ய வேண்டும் என்ற முழு அர்ப்பணிப்போடு 1861ஆம் ஆண்டு ஜூன் 26ம் தேதி சென்னை வந்து இறங்கினார்.

### டேவிட் ஸ்கடர் வருவதற்கு முன் ஆண்டிபட்டி ஊழிய பகுதி:

மதுரை அமெரிக்கன் மிஷன் 1834 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மதுரை மத்திய பகுதியிலும் மற்றும் மதுரையை சுற்றியுள்ள கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு பகுதிகளில் நற்செய்தி பணி தொடங்கப்பட்டது. குறிப்பாக வடக்கு, மேற்கு பகுதியைச்சுற்றியுள்ள திண்டுக்கல், தேனி, பெரியகுளம், வத்தலக்குண்டு, உத்தமபாளையம், கோம்பை, ஆணைமலையான்பட்டி, கம்பம், போடி, சின்னமனூர், ஆண்டிபட்டி மற்றும் மணியகாரன்பட்டி போன்ற பகுதிகளில் பெரிய முயற்சியால் நற்செய்தி பணி பறவியது. அமெரிக்கன் மிஷினிலிருந்து 1847ஆம் ஆண்டு ஏப்ரல் 15ம் தேதி அருள்திரு. ஜார்ஜ் போர்ட் என்பவாரும் அவருடைய மனைவி திருமதி. ஆன்



ஜெனட் போர்ட் அவர்களும் இணைந்து நற்செய்தி பணியை மதுரைக்கு மேற்கு பகுதியில் அறிவித்தார்கள். குறிப்பாக மணியகாரன்பட்டியில் 1850ஆம் ஆண்டில் அருள்திரு. ஜார்ஜ் போர்ட் என்ற மிஷனரினால் திருச்சபை உருவானது.

### டேவிட் காயிட் ஸ்கடர் மணியகாரன்பட்டியில் நற்செய்தி பணி:

1861 ஆம் ஆண்டு ஜீலை 23 ஆம் தேதி அருள்திரு. டேவிட் காயிட் ஸ்கடர் மற்றும் அவருடைய மனைவி திருமதி. ஹரியிட் ஸ்கடர் அவர்களும் மதுரை அமெரிக்க மிஷனில் இணைந்து பெரியகுளம் தென்கரை பங்களாவில் தங்கி அதன் சுற்றயுள்ள கிராமங்களில் நற்செய்தியை அறிவித்தார். ஆண்டிபட்டி, மணியகாரன்பட்டி கிராமத்தில் நற்செய்தியை அறிவிப்பதுமட்டுமல்லாமல் அந்த கிராமத்தை அதிகமாக நேசித்து

அடிக்கடி மக்களை சந்திப்பது வழக்கம். குறிப்பாக ஆண்டிபட்டி, மணியக்காரன்பட்டி திருச்சபையின் ஆன்மீக வளர்ச்சி பணிக்கு வித்திட்டவர் என்று சொன்னால் மிகையாகாது.

### இரத்த சாட்சியாக...

ஒருநாள் ஆண்டிபட்டி, மணியகாரன்பட்டி பகுதியில் நற்செய்தியின் மூலம் மக்களை சந்தித்தப்பிறகு மீண்டும் பெரியகுளத்திலிருக்கின்ற தன்னுடைய பங்களாவிற்கு போகும் வழியில் வைகை அணையை கடக்கச்சென்றார். அந்த வேளையில்தான் வைகை அணையில் வெள்ளபெருக்கு அதிகமாக வந்தது. எப்படியாவது வைகை நதியை கடந்துவிடலாம் என்று நினைத்து நீச்சல் அடித்து சென்றார். ஆனால் வைகையில் அதிகமான வெள்ளபெருக்கு சுழன்று சுழன்று வந்தது. நீச்சல் அடிக்க முடியாமலும், நீண்ட நேரம் மூச்சை பிடிக்க முடியாமலும் வெள்ள பெருக்கத்தில் அடித்து செல்லப்பட்டார். அன்றைய தினம் அருள்திரு. டேவிட் காயிட் ஸ்கடர் அவர்களுக்கு இறுதிநாளாக அமைந்தது. தன்னுடைய 9 மாத பெண் குழந்தையையும், தன் ஊழியத்தில் பெரும் துணையாகயிருந்த அன்பான மனைவியும் தனியாக விட்டுச்செல்லுகிறோமே என்ற ஏக்கத்துடன் தன்னுடைய மூச்சை வைகை வெள்ளத்திலே கிறிஸ்துவுக்காக 1862ம் ஆண்டு நவம்பர் 19ம் தேதி கோதுமை மணியாக நீரில் மூழ்கி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார் என்ற வேதனையும், சோகத்தையும் மணியகாரன்பட்டி, ஆண்டிபட்டி மற்றும் பெரியகுளம் மக்களுக்கு பெரிய இழப்பாக காணப்பட்டது.

### இவருடைய கல்லறைத்தோட்டம்:

இவருடைய உடல் இரண்டு நாட்களுக்கு பிறகு மதுரை மாவட்டம் சோழவந்தான் பகுதியில் ஒரு கரையோரத்தில் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டது. பின்பு அவரது உடலை கொடைக்கானல் ஆங்கிலிக்கன் ஆலயத்தின் கல்லறைத்தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### டேவிட் ஸ்கடரின் நினைவுகளை நிறைவேற்றிய தன் மகள் :

தன்னுடைய தகப்பனின் முகம் தெரியாமல் 9 வயதாயிருந்த மகள் (வேதா டட்டன் ஸ்கடர், 1861 டிசம்பர் 15ல் மதுரையில் கிறிஸ்தவ மிஷன் மருத்துவமனையில் பிறந்தார். இந்த மருத்துவமனையில் இவருடைய தாத்தா Dr. ஜான் ஸ்கடர் 1847ஆம் ஆண்டு முதல் மருத்துவ பணி செய்தார் என்பது குறிப்பிடதக்கது.) பின் நாட்களில் அமெரிக்காவில் மிகப்பெரிய கல்வியாளராகவும், எழுத்தாளராகவும் மிகப்பெரிய சுவிசேஷத்தின் சமுதாய இயக்கத்தை தொடங்கி, அதன் மூலம் தன்னுடைய தந்தையின் கனவை நிறைவேற்றினார். ஸ்கடரின் வம்சத்தின் மூன்றாவது தலைமுறையிக்கு பின் வந்தவர்தான் வேலூரில் மிகப்பெரிய மருத்துவமனையை கட்டிய ஐடா ஸ்கடர் ஆவார். 42 தலைமுறைகள் 1,100 ஆண்டுகள் கிறிஸ்துவுக்காக ஸ்கடரின் தலைமுறைகள் இறைப்பணியாற்றினார்கள் என்பது குறிப்பிடதக்கது.

### டேவிட் காயிட் ஸ்கடரின் நினைவுகள் :

1. கிளான்சி மற்றும் ஸ்கடர் கல்வி உதவி தொகையை (Scholarship) 300 டாலரை பசுமலையில் திருமதி. வாஸ்பன் நடத்தி வரும் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது.
2. 400 டாலர் டேவிட் காயிட் ஸ்கடர் நினைவாக அவருடைய சகோதரர் ஹாரஸ் E. ஸ்கடர் அவர்கள் கல்வி உதவி தொகையை அனுப்பினர்.
3. மணியகாரன்பட்டியில் Rev. டேவிட் காயிட் ஸ்கடர் நினைவாக புதிய ஆலயம் உள்ளது.
4. இவருடைய வாரிசு பிள்ளைகள் கடந்த சில ஆண்டுகளுக்குமுன் இவ்வாலயத்தையும், கொடைக்கானல் டேவிட் காயிட் ஸ்கடர் கல்லறைத் தோட்டத்தையும் பார்வையிட்டு ஜெபித்துச்சென்றார்கள் என்பது குறிப்பிடதக்கது.



ஜா.ஜான் ஞானராஜ்






# நெடுவிளை

## திருச்சபையின் இருநூற்றாண்டு




தென் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலியில் இருந்து தென்மேற்கே சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவில், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தின் அருகில் உள்ள ஒரு கிராமம் நெடுவிளை. ஊரைச் சுற்றிலும் குளங்கள் மற்றும் கிணறுகள் மூலமாக பசுமை மிகு வயல் நிலங்கள் என இயற்கை எழில் மிகுந்த அருமையான கிராமமே நெடுவிளை. களக்காட்டில் இருந்து சேரன்மகாதேவி செல்லும் சாலையில் உள்ள பிளவக்கல் இசக்கியம்மன் கோயிலில் இருந்து சுமார் அரைக் கிலோ மீட்டர் வடகிழக்கே நெடுவிளை கிராமம் காணப்படுகிறது. சேரன்மகாதேவியில் இருந்து தெற்கே சுமார் 14 கி. மீ. தொலைவில் களக்காடு செல்லும் நெடுஞ்சாலைக்கருகில் இக்கிராமம் உள்ளது.

### *நெடுவிளை – பெயர் காரணம்*

பனைமரம் உட்பட பல்வேறு வகையான மரங்கள் கொண்ட தோட்டங்களை உள்ளடக்கிய கிராமங்கள் விளை என்ற பெயரில் முடியும். பெரும்பாலும் கீழ் காடு என்று அழைக்கப்படும் தேரி வட்டார பகுதிகளில் விளை என்ற பெயரில் முடியும் கிராமங்கள் மிக அதிகமாக உள்ளன. தென்மேற்கு நெல்லையில் விளை என்ற பெயரில் முடிகிற சில கிராமங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று நெடுவிளை. நெடு என்பதற்கு நீண்ட மற்றும்

நெடிய என்பது பொருள் நீண்ட தோட்டங்களை உள்ளடக்கிய கிராமமாக இது இருந்திருக்க வேண்டும் ஆதலால் நெடுவிளை எனும் இப்பெயரைப் பெற்றுள்ளது.

### நெடுவிளைக்கு ரேனியஸ் ஐயரவர்கள் மூலம் நற்செய்தி

ரேனியஸ் ஐயரவர்களும், தாவீது, மாசிலாமணி, ஆசீர்வாதம், ஆகிய உபதேசிமார்களும் பாளையங்கோட்டையில் ரேனியஸால் நடத்தப்பட்டு வந்த செமினாரியில் படித்து வந்த மாணவர்களும் இணைந்து இடைவிடாது சுற்றியலைந்து செய்த நற்செய்திப் பணியால் 1824 இல் நெடுவிளை, கோவிந்தப்பேரி கிராமங்கள், 1825 இல் கரிசல், ஓடைக்கரை, செவல், துவரைக்குளம், துலுக்கப்பட்டி ஆகிய கிராமங்கள் கிறிஸ்தவத்தை ஏற்றன. இக்கிராமங்களில் சிறு சிறு கூட்டமாக மக்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள் என குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ரேனியஸ் ஐயரவர்களின் ரிப்போர்ட்களில் இடம் பெற்றுள்ள நெடுவிளை திருச்சபை

1824 ஆம் ஆண்டு கடைசி மாதங்களில் தோன்றிய சபைகளில் ஒன்றான இடையங்குளம் வட்டாரத்தைச் சார்ந்த நெடுவிளை சபை மக்கள் சுவிசேஷ ஊழிய ஆர்வம் மிக்கவர்களாக இருந்ததாகவும், நெடுவிளை சபை மக்களின் ஊழியத்தின் பயனாகவும் அவர்களுக்கு கரிசல் ஓடைக்கரை கிராமங்களில் இருந்த செல்வாக்கின் மூலமாகவும் கரிசல் ஊர் தலைவனும் அவரைச் சார்ந்த சில குடும்பங்களும் அவர்களுக்கு உறவினர்களாக இருந்த ஓடைக்கரை மற்றும் அதற்கு அருகில் உள்ள கிராமங்களில் வசித்து வந்த சில வீட்டார்களும் கிறிஸ்து நாதரை அண்டிக் கொண்டார்கள் என்ற குறிப்பையும் 1825 பிப்ரவரியில் ரேனியஸ் ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மேற்கண்ட ரேனியஸ் ஐயரவர்களின் மிஷன் குறிப்பின் மூலம் நெடுவிளை, கரிசல், ஓடைக்கரை, இடையன்குளம் கிராம மக்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவினர்களாக இருந்தார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

### ரேனியஸ் ஐயரவர்களுக்குப் பின்னர் நெடுவிளை திருச்சபை

1824 இல் நெடுவிளை கிராமத்தில் கிறிஸ்தவத்தை ஏற்றவர்கள் உடனடியாக தங்களது பழைய விக்கிரக வழிபாடுகளில் இருந்து விலகி இயேசு கிறிஸ்துவை வழிபட தொடங்கினார்கள். ரேனியஸ் ஐயரவர்களின் மரணத்திற்கு பிறகு சுமார் 100 ஆண்டுகளாக திருமண்டலக் குறிப்புகளில் நெடுவிளை கிராமம் மற்றும் சபை குறித்து குறிப்புகள் எதுவும் இல்லை.

### 1926 இல் புதுப்பிக்கப்பட்ட நெடுவிளை திருச்சபை

1824 முதல் 1925 வரையிலான காலகட்டத்தில் இடையன்குளத்தைத் தலைமை இடமாகக் கொண்டிருந்த செவல் சர்க்கிளின் மிஷன் குறிப்புகளில் நெடுவிளை கிராமம் மற்றும் சபை குறித்து எவ்வித குறிப்புகளும் இல்லை என்பது வியப்பாக உள்ளது. 1926 இல் புதிதாக கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட நெடுவிளை சபை பெரியோர்களின் நான்காம் தலைமுறையினர் நெடுவிளையில் தற்போது வசித்து வருகிறார்கள். அவர்களிடம் 1824 இல் கனம். ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்திப் பணியால் நெடுவிளை கிராமத்தார் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டதையும் நெடுவிளையில் சபை உருவாகி இருந்ததையும் குறித்துக் கேட்டபோது அது குறித்த கூடுதல் தகவல்களை அவர்களிடம் இருந்து பெற இயலவில்லை.

### ரேனியஸ் கால திருச்சபை முற்றிலும் நலிவடைதல்

இடையன்குளத்தில் இருந்து சுமார் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் தென்மேற்கில் இருந்த நெடுவிளையில் நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்களால் 1824 இல் தொடங்கப்பட்ட CMS சபையானது ரேனியஸ் ஐயரவர்களுக்குப் பின் முற்றிலும் நலிவடைந்துவிட்டது.

### புதுப்பிக்கப்பட்ட நெடுவிளை சபையும் குடும்பங்களும்

தற்போதைய நெடுவிளையில் சுமார் நான்கு குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள். முதல் குடும்பம் விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள பசுக்கிடவிளை பகுதியில் இருந்து குடியேறிய நாடான் குடும்பத்தினர். இந்த குடும்பத்தில் இருந்து தான் முதன்முதலாக புதுப்பிக்கப்பட்ட நெடுவிளை திருச்சபையில் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

இந்த குடும்பத்தின் தலைவராக இருந்த ஈனன் என்ற ஈனமுத்து நாடார் அவருடைய ஐந்து பிள்ளைகளான பாலையாநாடார். துரைமுத்து, செல்லையா நாடார், முத்தையா நாடார், பொன்னையா ஆகியோர் மற்றும் ஈன முத்து நாடாரின் சித்தப்பாக்கள் குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகளான வண்ணமுத்து குடும்பம், நாராயணன் என்ற வேதமுத்து நாடார் குடும்பம், செண்பக நாடார் வேதமாணிக்க நாடார் போன்ற அனைவரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இந்த குடும்பத்தில் முதலாவது கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட ஈனமுத்து குடும்பத்தினர். கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளும் முன்பு நெடுவிளையில் மாசான சாமியை குலதெய்வமாக கோயில் கட்டி வணங்கி வழிபட்டு வந்துள்ளனர். இவர்களைத் தொடர்ந்து பல குடும்பத்தினர் நெடுவிளையில் குடியேறி உள்ளனர்.

அவர்களது விபரங்கள் பின்வருமாறு:

பத்மநேரி கோட்டைக்கரைச்சாமியை குலதெய்வமாக வழிபட்ட வெள்ளக்கண் நாடார் குடும்பத்தினர். ஊய்க்காட்டான் சுடலைமாடசாமியை குலதெய்வமாக வழிபட்ட காடுவெட்டி அருகில் உள்ள வெப்பக்குளம் கிராமத்தில் இருந்து குழுவாக குடியேறியவர்கள்.

இறுதி குடியேற்றமாக நாகர்கோவிலில் இருந்து வந்து குடியேறிய குடும்பத்தார்கள் மேற்கண்ட நான்கு குடும்பத்திலும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். முதலாவதான நாடான் குடும்பத்தினர் பெரும்பாலும் கிறிஸ்தவர்களாக உள்ளனர். கடைசியாக வந்த நாகர்கோவில் குடும்பத்தில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாக உள்ளது.

### சர்க்கிள் சேர்மன் அருள்திரு. M. V. ஜான் ஐயரவர்களின் நற்செய்திப் பணி

அக்காலத்தில் இடையன்குளத்தைத் தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்ட செவல் சர்க்கிளில் இடையன் குளத்தில் தங்கி பணி செய்த சேகர குருவானவர்களே செவல் சர்க்கிள் சேர்மன்களாகவும் செயல்பட்டு வந்தனர். 1926 முதல் 1936 வரை பத்து ஆண்டுகளாக சர்க்கிள் சேர்மன் ஆக பணி செய்த அருள்திரு. M. V. ஜான் ஐயரவர்கள் நற்செய்தி அறிவிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் அவர் தனது ஊழியப் பணியை இங்கு 1926 இல் தொடங்கினார்.

### பத்மநேரி கிராமத்தார் மூலம் நெடுவிளை கிராமத்தார் சந்தித்த பிரச்சினைகள்

அருள்திரு. M. V. ஜான் ஐயரவர்கள் நற்செய்திப்பணியைத் தொடங்கிய ஆண்டில் (1926) நெடுவிளை நாடார்கள் தங்களது வயல்களில் விளையும் நன்செய் மற்றும் புன்செய் பயிர்களை அறுவடை செய்து அதன் மகசூல் கதிர் கட்டை பத்மநேரி கிராமத்து மறவர்களுக்கு சொந்தமான புன்செய் நிலங்கள் வழியே நெடுவிளை கிராமத்திற்கு எடுத்துச் செல்லும் நிலை இருந்தது. ஏனென்றால் நெடுவிளைக்கு தென்புறம் நெடுவிளை நாடார்களுக்கு பாத்தியப்பட்ட புன்செய் நிலங்கள் இல்லை. வடபுறம் தான் அவை இருந்தன. மறவர்கள் தங்கள் நிலங்களின் வழியாக நெடுவிளை நாடார்கள் தங்களது விவசாய நிலத்தின் கதிர் கட்டை கொண்டு செல்ல தடை செய்து வந்தார்கள்.

### நெடுவிளை கிராமத்தார் இடையங்குளம் சென்று முறையிடுதல்

இந்த இக்கட்டான சூழ்நிலையில் நெடுவிளை நாடார்கள் தங்களது ஊருக்கு வடகிழக்கே தங்களது சமூகத்தினர் வலிமையாக வசித்து வந்த இடையன்குளத்திற்கு வருகை தந்து இடையன்குளத்தில் வசித்து வந்த குருவானவரும் சர்க்கிள் சேர்மனுமான அருள்திரு. M. V. ஜான் ஐயரவர்களையும் இடையன்குளம் ஊர் பெரியோர்களையும் சந்தித்து தங்களுக்கு நீதி பெற்றுத் தர வேண்டி முறையிட்டனர்.

### இடையங்குளம் பெரியோர்களின் வேண்டுகோள்

அக்காலத்தில் இடையன்குளத்தில் வசித்து வந்த நாடார்கள் அனைவரும் கிறிஸ்தவத்தை ஏற்றிருந்தார்கள். மேலும் இடையன்குளத்து நாடார்கள் உதாரகுணமும் தைரியமும் வீர உணர்வும் மிக்கவர்களாக இருந்தார்கள். நெடுவிளை கிராமத்தாருக்கு உறவினர்களுமாக இருந்தார்கள். நெடுவிளை கிராமத்தாருக்கு உதவி செய்ய சம்மதித்த இடையன்குளம் ஊர் பெரியவர்கள் ஒரே ஒரு வேண்டுகோளைச் சொன்னார்கள். அது என்னவென்றால் 'தாங்கள் பத்மநேரி மறவர்களிடம் வாதிட்டு அவர்களது நன்செய் மற்றும் புன்செய் மகசூல் கதிர் கட்டை கொண்டு வருவதற்கான உரிமையை பெற்றுக் கொடுத்து எல்லா உதவிகளையும் செய்கிறோம் அவ்வாறு செய்தால் நீங்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்' என வேண்டிக் கொண்டார்கள். அதை நெடுவிளை சமூக ஊர் பெரியவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

### புதுப்பிக்கப்பட்ட நெடுவிளை திருச்சபையாரின் முதல் ஞானஸ்நானம்

இடையன்குளம் பெரியோர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நெடுவிளை பெரியோர்கள் உடனடியாக குடும்பமாக. ஞானஸ்நானமும் பெற்றுக் கொண்டார்கள். ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட குடும்பத்தினர் பின்வருமாறு:

ஈனன் என்ற ஈனமுத்துவின் ஐந்து மகன்கள் குடும்பத்தினர். திரு. ஈ. பாலையா, திரு. ஈ. துரைமுத்து, திரு. ஈ. செல்லையா, திரு. ஈ. முத்தையா, திரு. ஈ. பொன்னையா மற்றும் ஈனன் என்ற ஈனமுத்து நாடாரின் சித்தப்பாமார் குடும்பத்தைச் சேர்ந்த திரு. வேதமுத்து. திரு. வ. வேதமாணிக்கம் மேற்கண்ட ஏழு குடும்பத்தினரும் தங்களுடைய பிள்ளைகளோடு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர்.

### நெடுவிளை கிராமத்தாரின் பிரச்சினைக்குத் தீர்வு

அருள்திரு. M. V. ஜான் ஐயரவர்களின் துணையுடன் இடையன்குளம் ஊர் பெரியவர்கள் பத்மநேரி மறவர் சமூகத்தவரிடம் சென்று நெடுவிளை கிராமத்தாரின் சார்பாக வாதிட்டு இந்தத் தொல்லையில் இருந்து நிரந்தரமான விடுதலைக்கு ஏற்பாடு செய்தார்கள். அதில் இருந்து நெடுவிளை கிராமத்தின் வடபுறம் இக்கிராமத்தாருக்குச் சொந்தமாக இருந்த விவசாய நிலங்களில் விளைந்த மகசூல்களை பத்மநேரி கிராமத்தாரின் நிலங்கள் வழியாக நெடுவிளைக்கு கொண்டு வர இடையூறுகள் ஏற்படவில்லை.

### நெடுவிளையில் தேவாலயம்

நெடுவிளை ஊர் பெரியவர் ஈனன் என்ற ஈனமுத்துவின் ஐந்து மகன்களால் அவர்களுக்கு சொந்தமான நிலம் நெடுவிளை தேவாலய கட்டுமானப் பணிக்கென அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அந்த நிலத்தில் மண் சுவரால் கட்டப்பட்டதும் பனை ஓலையை மேற்கூறையாகக் கொண்டதுமான தேவாலயத்தை அமைத்து அங்கு ஆண்டவரை வழிபட்டு வந்தனர். பிற்காலத்தில் அந்த நிலத்திற்குள்ளேயே தொடக்கப்பள்ளி தொடங்கப்பட்டு அதற்கான கட்டிடமும் கட்டப்பட்டது. அந்த ஈனமுத்துவின் குடும்பத்தினர் தேவாலயம் கட்ட அன்பளிப்பாகக் கொடுத்த இடத்தை ஒட்டி 3 செண்ட் நிலம் பிற்காலத்தில் மூக்க நாடார் என்ற ஏசுதாசன் குடும்பத்தாரால் வழங்கப்பட்டது. அந்த இடத்தில் கன்வென்ஷன் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்த மேடை அமைக்கப்பட்டுள்ளது.

நெடுவிளை கிராமத்தையொட்டி தென் பகுதியில் நெடுவிளை கிராமத்தாருக்கு நில பாத்தியதை கிடைக்க பெரிதானதோர் நிலம் கொடுத்த மகான் திரு. கணபதி தேவர் இடையன்குளம் குருவானவரின் உதவி மற்றும் இடையன்குளம் ஊர் பெரியோர்களின் முயற்சி ஆகியவற்றால் நெடுவிளை கிராமத்தாருக்கு தங்களது நன்செய் மற்றும்

புன்செய் மகசூல் கதிர் கட்டை கொண்டு வருவதற்கான உரிமை கிடைத்த போதும் நெடுவிளை ஊரை ஒட்டிய தென் பகுதி நிலங்கள் அனைத்தும் பத்மநேரி கிராமத்தார் வசமே இருந்ததால் சிற்சில பிரச்சினைகள் ஏற்பட்டு வந்தது. நெடுவிளை ஊரை ஒட்டிய தென் பகுதியில் நெடுவிளை கிராமத்தாருக்கு சொந்தமாக நிலங்கள் இருந்தால் மட்டுமே இதற்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் என்று எண்ணிய பத்மநேரி ஊர் பெரியவர் திரு. பொன்னுத்தேவர் அவர்களின் மகனாகிய திரு. கணபதி தேவர் அவர்கள் நெடுவிளையை ஒட்டி தென்பகுதியில் தமக்கு சொந்தமாக இருந்த பெரிதான நிலத்தை நெடுவிளை கிராமத்தின் 15 பெரியோர்களுக்கு கொடுத்ததோடு தமது நிலத்தின் அருகில் இருந்த திரு. கந்தசாமித்தேவர் அவர்களின் மூன்று மகன்களான திரு. சுப்பையாத்தேவர், திரு. முத்துச்சாமித்தேவர் திரு. சங்கரத்தேவர் ஆகியோரின் நிலங்களையும் வாங்கி நெடுவிளைகிராமபெரியோர்களுக்குக்கொடுத்தார். இதற்கான பத்திரப்பதிவு 06.08.1945 அன்று நடைபெற்றுள்ளது. நெடுவிளை திரு. ஈனன் என்ற ஈனமுத்து அவர்களின் கடைசி மகன் திரு. பொன்னையா மற்றும் அக்கால நெடுவிளை ஊர் பெரியவர்களோடு திரு. பொ. கணபதி அவர்களுக்கு இருந்த நெருக்கமான நல்லுறவு இதற்கு காரணமாக இருந்தது. இத்தகைய நல் உள்ளம் கொண்ட திரு. கணபதி தேவர் மாணிக்கத்தம்மாள் என்ற குட்டியம்மாளைத் திருமணம் செய்திருந்தார். இந்த தம்பதியருக்கு 21 பிள்ளைகளைக் கொடுத்து ஆண்டவர் ஆசீர்வதித்தார். இன்றளவும் இக்குடும்பத்தாருக்கும் நெடுவிளை கிராமத்தாருக்கும் இடையே சிறந்த நல்லுறவு காணப்பட்டு வருகிறது.

### புதுப்பிக்கப்பட்ட நெடுவிளை சபையின் தொடக்க கால வளர்ச்சி

புதுப்பிக்கப்பட்ட நெடுவிளை திருச்சபையின் தொடக்க கால வளர்ச்சியானது 1926 இல் சபை புதுப்பிக்கப்படக் காரணமாக இருந்த சேகர குருவானவர் அருள்திரு M. V. ஜான் ஐயரவர்கள் காலத்தில் (1926-1936) தொடங்கியது. அவர்களை அடுத்து பணி செய்த கனோன். பால்மாணிக்கம் ஐயரவர்களின் பணிக் காலம் சபை வளர்ச்சிக்கான சிறந்த அடித்தளத்தைத் தந்தது. (1936 - 1941) அவரை அடுத்து பணி செய்த துரைச்சாமி ஐயரவர்கள் காலத்தில் (1941 - 1946) மற்றும் சா. சாலமோன் சைமன் ஐயரவர்கள் காலத்தில் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றது. இதற்கு 1943 முதல் 1949 வரை சுமார் ஆறு ஆண்டுகள் நெடுவிளையில் மிஷன் வீட்டில் தங்கி பணி செய்த சபை ஊழியரான திரு. R. D. கோயில்பிச்சை உபதேசியார் முக்கிய காரணமாக இருந்தார். இந்த உபதேசியாரின் பணிக்காலத்தில் அநேக இந்து குடும்பத்தினர் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டனர்.

### புதுப்பிக்கப்பட்ட நெடுவிளை திருச்சபையின் இடைக்கால வளர்ச்சி

புதுப்பிக்கப்பட்ட நெடுவிளை திருச்சபையின் இடைக்கால வளர்ச்சிக்கு கீழ்க்கண்ட காலத்தில் பணி செய்த குருவானவர்கள் அடித்தளமாக இருந்தனர்.

- .கேப்டன். Y. சாமுவேல் ஐயரவர்கள், (1952-1954)
- M. அன்பையா சாம்ராஜ் ஐயரவர்கள், (1954-1958)
- O D. ரத்தினசாமி ஐயரவர்கள் 1958-1962)
- I. ஏசுதாசன் சாமுவேல் ஐயரவர்கள், (1962-1963)
- R. A. J செல்வராஜ் ஐயரவர்கள், (1963-1965)
- S. M. தங்கையா ஐயரவர்கள், (1965-1969)

மேற்கண்ட குருவானவர்களின் சிறந்த அடித்தளத்தால் இவர்களைத் தொடர்ந்து குருவானவராகப் பணி செய்த D. V. J. கிருபைமணி ஐயர் அவர்களின் பணிக் காலத்தில் (1969-1976) 10 குடும்பத்தினர் பருவம் கடந்த ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்டனர் சபை சிறந்த வளர்ச்சியை பெற்றது.

### சபை ஊழியருக்கான வீடு, தொடக்கப் பள்ளி மற்றும் தேவாலயம் கட்டுமானப் பணிகள்

கிருபைமணி ஐயரவர்களுக்குப் பின் சேகர குருவானவர் ஆகப் பொறுப்பேற்ற D. நெல்சன் ஜெபத்துரை ஐயரவர்கள் ஊழிய வாஞ்சை மிகுந்தவர் அன்னாரின் பணிக்காலத்தில் (1976-1981) அவர்களது முயற்சியால் தேவாலய விஸ்தரிப்புக் காணிக்கை பெறப்பட்டது. தேவாலயப் பணிக்கு சபையார் காணிக்கை கொடுக்க உற்சாகப்படுத்தப்பட்டனர். D. நெல்சன் ஜெபத்துரை ஐயரவர்களுக்குப்பின் P. D. எட்வின் ஐயரவர்கள் (1980-1986), S. சாமுவேல் ஐயரவர்கள் (1986-1988), P. ஆபிரகாம் பீட்டர் ஐயரவர்கள் (1988 -1993) ஆகியோர் இக்காலகட்டத்தில் சிறப்பாகப் பணி செய்தனர். இடைக்காலத்தில் நெடுவிளை திருச்சபை சிறப்பான வளர்ச்சியைப் பெற்று வந்த இந்த காலகட்டத்தில் சபை ஊழியருக்கான மிஷன் வீடு, தொடக்க பள்ளிக்கான கட்டிடம் தேவாலயம் ஆகிய கட்டுமானப் பணிகள் சிறப்பாக நடைபெற்றது. மூன்று பணிகளும் அடுத்தடுத்து நடைபெற்ற போதும் சபை மக்கள் தங்களை தியாகம் செய்து அர்ப்பணிப்போடு கூட உற்சாகமாய் காணிக்கைகளை கொடுத்தனர். பிற இடங்களுக்கும் சென்று இதற்காக காணிக்கைகளை பிரித்துக் கொடுத்தனர்.

### தேவாலயக் கட்டுமான பணியும் பிரதிஷ்டையும்

சபை ஊழியருக்கான மிஷன் வீடும், அதன் பின்னர் தொடக்கப் பள்ளிக்கான கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்ட பிறகு சபை மக்கள் தாங்கள் அமர்ந்து ஆராதிப்பதற்கு அப்போது இருந்த தேவாலயம் போதுமானதாக இல்லாதபடியால் உடனடியாக புதிய தேவாலயம் கட்ட விரும்பினர். நெடுவிளையில் சபை ஊழியராகப் பணி செய்த திரு. K. பக்தசிங் ஆசிரியர் சபை ஊழியராக பணி செய்த காலத்தில் தேவாலயம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. திரு. M. ஜெயசீலன் டேவிட் ஆசிரியர் சபை ஊழியராகப் பணி செய்த காலத்தில் கட்டுமானப் பணி மேல்மட்டம் வரை எழும்பி நின்றது. திரு. G. செல்வராஜ் ஆசிரியர் சபை ஊழியராகப் பணி செய்த பணி செய்த காலத்தில் பூச்சுமானம் உட்பட இதர அனைத்து பணிகளும் சிறப்பாக நிறைவு செய்யப்பட்டது. புதிய

தேவாலயம் சபை ஊழியர் திரு. G. செல்வராஜ் அவர்கள் இருந்த காலத்தில் சேகர குருவானவர் அருள்திரு. ஆபிரகாம் பீட்டர் ஐயரவர்கள் தலைமையில் 18. 08. 1989 வெள்ளி அன்று நெல்லை பேராயர் மகாகனம். ஜேசன் சிரோன்மணி தர்மராஜ் அவர்களால் கிறிஸ்து தேவாலயம் என்ற பெயரில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. A. ஜேக்கப் செல்லையா ஐயரவர்கள் காலத்திலும் (1993-1996), V.செல்வராஜ் பொன்ராஜ் ஐயரவர்கள் காலத்திலும் (1996-1997), அருள்திரு. T. ஸ்டீபன் செல்வின்ராஜ் ஐயரவர்கள் காலத்திலும் S.A.E.யோசுவா ஐயரவர்கள் காலத்திலும் (1998-2003) நெடுவிளை திருச்சபை படிப்படியாக சிறப்பான வளர்ச்சியைப் பெற்றது. S.A.E. யோசுவா ஐயரவர்கள் காலத்தில் நெடுவிளை திருச்சபையின் தலைமையிடமான இடையன்குளத்தில் நூற்றாண்டு ஸ்தோத்திர பண்டிகை (கூட்டம்) 2001 ஆம் ஆண்டு ஜூலை 29, 30, 31 ஆகஸ்ட் 1, 2 ஆகிய நாட்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

### தேவாலய கோபுரம் பிரதிஷ்டை

தேவாலயத்திற்கு கோபுரம் கட்ட வேண்டும் என்று விரும்பிய நெடுவிளை சபையார் அதற்கான முயற்சிகளை முன்னெடுத்தனர். சபை ஊழியர் திரு. E. வின்செண்ட் அவர்கள், சேகர குருவானவர் J. இஸ்ரவேல் தனசிங் ஐயரவர்கள் தலைமையில் 19. 08. 2006 அன்று நெல்லை பேராயர் மகாகனம்.S. ஜெயபால் டேவிட் அவர்களால் தேவாலய கோபுரம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### 2001 ஆம் ஆண்டின் நெடுவிளை சபை பெரியோர்கள்

2001 ஆம் ஆண்டின் நெடுவிளை சபை பெரியோர் பெயர்கள் 2001 இல் ஆண்டில் வெளியிடப்பட்ட இடையன்குளம் 100 ஆவது ஆண்டு சேர்ப்பின் பண்டிகை (ஸ்தோத்திர பண்டிகை - கூட்டம்) விழா மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களது பெயர்கள் ஏசுதாசன் சாமுவேல், பா. பால், பா. ஏசுவடியான், து. தாமஸ், திரு. செ. யோசேப்பு, திரு. செ. யாக்கோபு, திரு. இஸ்ரவேல் பொன்னுத்துரை.

### சமீபகால சபை வளர்ச்சி

தேவாலய கோபுரம் கட்டப்பட்ட பின்னர் சமீப காலத்தில் இரண்டு ஏக்கர் 4 செண்ட் நிலம் ஊரை ஒட்டி வாங்கப்பட்டுள்ளது. ஊருக்கு மத்தியில் நான்கு தெருக்கள் சந்திக்கும் இடத்தில் 10 செண்ட் நிலம் சபைக்கு வாங்கப்பட்டுள்ளது. நெடுவிளை திருச்சபைக்கு கல்லறைத் தோட்ட இடம் வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### நெடுவிளை திருச்சபையின் படிப்படியான வளர்ச்சி

திருநெல்வேலி டயோசிசன் 1930 ஆம் ஆண்டு வருமான சுருக்கக் கணக்கு மற்றும் 1933 ஆம் ஆண்டு வருமான சுருக்கக் கணக்கு ஆண்டறிக்கையில் இடையன்குளத்தைத் தலைமை இடமாகக் கொண்ட செவல் சர்க்கிளுக்கு உட்பட்ட சபைகள் பட்டியலில் நெடுவிளை சபை இடம் பெறவில்லை இக்கிராமத்தில் 1926 இல் சபையார் கிறிஸ்தவத்தை ஏற்றிருந்தனர்.

1943 ஆம் ஆண்டு டயோசிசன் ஆண்டறிக்கைப்படி நெடுவிளை திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 43 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 11 பேர்.

1962 - 1963 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி நெடுவிளை திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 73 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 16 பேர்.

1970 - 1971 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி நெடுவிளை திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 73 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 19 பேர்.

1980 க்குப் பின்னர் இந்துக்களில் இருந்து நெடுவிளை திருச்சபையில் பல குடும்பத்தினர் கிறிஸ்தவத்தில் சேர ஆரம்பித்தார்கள். சபை இரு மடங்குக்கும் மேலாக வளர்ச்சி பெற்றது.

1997 - 1998 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி நெடுவிளை திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 188 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 123 பேர்.

தொடர்ந்து இந்து சமயத்தில் இருந்து இன்னும் அனேக குடும்பத்தினர் கிறிஸ்தவத்தில் சேர முன் வந்தார்கள் ஆதலால் அதன்பின்பும் திருச்சபை அடுத்த 15 ஆண்டுகளில் இரட்டிப்பான வளர்ச்சியைப் பெற்றது.

2002 - 2003 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி நெடுவிளை திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 301 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 202 பேர்.

2023 - 2024 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி நெடுவிளை திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 358 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 288 பேர். சங்கக்காணிக்கை உரிய முறையில் செலுத்தாததால் சபை டாப்பில் இடம் பெறாத கிறிஸ்தவர்கள் எண்ணிக்கையையும் சேர்த்தால் சுமார் 400க்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் நெடுவிளை திருச்சபையில் உள்ளனர்.

### தற்போதைய நெடுவிளை திருச்சபை

தற்போதைய நெடுவிளை திருச்சபையில் சுமார் 100 கிறிஸ்தவ குடும்பத்தினர் உள்ளனர்.



திருநெல்வேலி திருமண்டலம் ரெட்டியார்பட்டி ஆண்கள் ஐக்கிய சங்கத்தினர் மற்றும் குருமார்கள். கடந்த நாட்களில் ஜெபக்கூட்டப் பாடல்கள் பாடும் பொழுது எடுத்த படம்

தென் தமிழக திருச்சபையில் கிறிஸ்தவ ஆராதனைகளில் பாடுவதற்காக, ஜெர்மன் லுத்தரன் சபைக் கீதங்கள், ஆங்கில திருச்சபைக் கீதங்கள், டென்மார்க் தேசத்துத் திருச்சபைக் கீதங்கள் முதலியவற்றினின்று தெரிந்தெடுக்கப்பட்டுத், தமிழில் மொழிபெயர்ப்பாகி, 'ஜெர்மன் கீதங்கள்," 'தரங்கம் பாடிக் கீதங்கள்," 'நாகர்கோவில் கீதங்கள்," 'C.M.S. ஞானப் பாட்டுகள்," 'S. P. G. ஞானகீதங்கள்," என்ற பெயர்களில் வெளியிடப்பட்டிருந்தன. இவற்றில், பின்னவையிரண்டிலும் ஆங்கில திருச்சபைக் கீதங்களுடன் மற்ற மூன்றிலிருந்து தெரிந்து கொள்ளப்பட்ட சில கீதங்களுமுண்டு. இப்பாடல்களனைத்தும் மேல் நாட்டிசையமைப் புள்ளனவாய், மேனாட்டு இராகத்திலேயே பாடப்பட்டுவந்தன. திருநெல்வேலியில் ஊழியஞ்செய்த ஜெர்மன் லுத்தரன் மிஷனெரிகளாகிலும் சரி, ஆங்கில C. M. S., S. P. G. மிஷனெரிகளானாலும் சரி, மேனாட்டுப் பண்ணில் பாடப்பட்ட கீதங்களைத் தவிர, தமிழிசையில் இசைக்கப்படும் கீர்த்தனைகளெவையும் ஆலய ஆராதனைகளில் பாடப்படலாகாதென்று கண்டிப்பான தீர்மானமுடையவர்களாயிருந்தனர். நாசரேத், சாயர்புரம், முதலூர், இடையன்குடி, கிறிஸ்தியாநகரம், என்ற சில S. P. G. சேகரங்களில், வேதநாயக சாஸ்திரியாரின் சில பாடல்களை மட்டும், ஆராதனையில் ஆசீர்வாதம் கூறின பின், சபையார் பாடுவது வழக்கத்திலிருந்தது.

இந்தியர்களால் சரியாக விளங்கிக்கொள்ளவும், பாராட்டவும் கூடாத ஆங்கில இராகங்களில் தான் ஆராதனைகளில் பாட்டுகள் பாட வேண்டும் என்று இந்திய மக்களின் கடவுள் வழிபாட்டில் சட்டம் விதித்து, அவர்களுக்கு உரிமையானராகங்களைப் புறக்கணித்து வந்திருப்பது மிஷனெரிமார் செய்துள்ளது வருந்தத்தக்கது!. மனிதவுள்ளத்தின் மீது சங்கீதத்துக்கு எத்துணையளவு செயலாக்கம் உண்டு என்று நாமறிவோமே. பக்தியுணர்ச்சியை வளர்க்கக்கூடிய பெரிய சக்தியுள்ளது சங்கீதம் என்றுமறிவோமே; அப்படியிருந்தும், தமிழ் மக்கள் உள்ளக்கிளர்ச்சியுடன் அனுபவித்து, ரசித்துணரக்கூடிய இந்த வல்லமையுள்ள துணைக்கருவி தரும் நற்பயனை, புறக்கணித்து, அதனை ஆராதனைகளில் இது காலபரியந்தம் உபயோகித்துக் கொள்ளாதிருந்திருக்கிறோமே!.

1861 க்கு பிறகு தென் தமிழக சபைகளில் அதிலும் குறிப்பாக திருநெல்வேலி திருச்சபைகளில் உள்ள பாரம்பரிய சபைகளில் ஒவ்வொரு ஆராதனைகளுக்கும் அன்றைக்கு புலமைபெற்ற விளங்கிய சில உபதேசிமாரால், அல்லது சபை மக்களால் எழுதப்பட்டுப், பனை ஓலை ஏடுகளில் காக்கப்பட்டு வந்தவை. இந்த ஜெபகூட்டப் பாடல்கள் பின்னர் “கைப் பிரதிப் பாடல்களாக” வெளிவந்தன. இன்னும் பல சபைகளில் இப்படிப்பட்ட கைபிரதி அல்லது ஜெபகூட்டப் பாடல்கள் பாடப்பாடுவது சிறப்புக்குறியது ஆகும். அப்படிப்பட்ட பாடல்களை பாடும் சபை மக்களை சந்தித்து இன்னும் அச்சில் ஏற்றப்பாடாத பாடல்களை வெளியே கொண்டு வர ஒரு சிறிய முயற்சி இது.

இதற்கென்று முயற்சி செய்து வரும் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க உறுப்பினர்கள், வாலிபர்கள், குருமார்கள், சபை மக்கள் உதவி செய்து வரும் ஒவ்வொருவரையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்**



# தரங்கம்பாடி வரலாற்று மரபுநடை

ஜே.பர்னபாஸ்

சேலம் வரலாற்றுச் சங்கம்

கர்த்தர் தம்முடைய அதிசயமான செய்கைகளை நினைவுகூரும்படி செய்தார். ' - சங்கீதம் 111:4

**திருத்தொண்டர்கள் கரையேறி நின்ற இடம்:**

இந்தியா வந்த முதல் சீர்திருத்த கிறிஸ்தவத் திருத்தொண்டர்கள் சங்கைக்குரிய சிரேஷ்டர் பர்த்தெலோமேயூஸ் சீகன்பால்க் (Provost Bartholomaus Ziegenbalg), மற்றும் சங்கை. புளூட்சோ (Rev.Plutschau), ஆகியோர் தரங்கம்பாடி கரையில் வந்து இறங்கிய நாளின் 318 ஆவது ஆண்டு நிறைவு நாளில், இந்த வரலாற்று மரபுநடை திருத்தொண்டர்கள் வந்து இறங்கி கால்கடுக்க கொளுத்தும் வெய்யிலில் நின்று கொண்டு, டேன்ஸ்போர்க் (Dansborg) கோட்டைக்கு உள்ளே செல்லும் அனுமதிக்காக காத்திருந்த இடத்தில், இந்த மரபுநடை 9-7-2024 அன்று காலை துவங்கியது. அங்கே ஒரு நினைவுச் சின்னம் அந்த இருவரின் பெயரைச் சொல்லிக் கொண்டே இருக்கக் கண்டேன். கத்தும் கடலலைகள் மோதியிடிக்கும் கரைக்கு அருகே அந்த நினைவுச் சின்னம் அந்த சோகக் கதையை சொல்லக் கேட்டேன். வரலாற்றின் ஏடுகள் சொல்லும் சரித்திரக் கதைகளை உறுதிப்படுத்தும் இதுபோன்ற **நினைவுச் சின்னங்களின்** பாதுகாப்பை உறுதி செய்வோம்.



சிரேஷ்டர் சீகன்பால்குவிற்கு மரியாதை செலுத்த ஒருகூட்டம் அதில் நாங்களும் சேர்ந்து கொண்டோம். ஆனால் அவர்கூட வந்த சங்கை. புளூட்சோவை ஏன் மறந்துபோனோம். அவர்கள் இருவருமே இங்கே நினைக்கப்பட வேண்டியவர்களே. சமீபத்தில் வளைதளத்தில் சங்கை புளூட்சோவின் கல்லறையை கண்டறிந்தேன். மறக்கப்பட்ட அந்தத் திருத்தொண்டரைப் பற்றி நாம் கூடுதல் தகவல்களைச் சேகரிக்க வேண்டுமே.



ஜெர்மன் தேசத்தில் பிடன்பிளத் என்ற இடத்தில் சங்கை புளூட்சோ வின் கல்லறை.

**தரங்கம்பாடி டேனிஸ் கோட்டை (Dansborg )**

கி. பி. 1620ல் கட்டப்பட்ட டேனிஸ் கோட்டை அலைகள் பாடும் கடற்கரையில் கம்பீரமாக - என்றும் நிலைத்திருப்போம் என்று நின்றிருந்தது அன்று! உள்ளே ஒரு அருங்காட்சியகம், இன்றும் நல்லதண்ணீர் தரும் கிணறு, கடல் காற்றில் அரிக்கப்பட்டு சுவடாக நிற்கும் பீரங்கிகள், என்று கண்ணில் நிலைத்த காட்சிகள் அநேகம்.

**கவர்னர் மாளிகை (Governor's Bungalow)**

இந்திய தொல்லியல் துறை பழுதுபார்த்து நிலைநிறுத்தும் திருப்பணிகள் நடந்துகொண்டிருந்தது. அன்றைய பழைய முறைப்படியே கட்டுமானப் பணிகள் சுண்ணாம்புக்காரை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அருகே ஒரு கோயில் இங்கேயும் ஒரு நல்லதண்ணீர் ஊரும்



கிணறு குளிக்க விருப்பமுடையவர்கள் அங்கே குளிக்கலாம் என்றே தெரிகிறது. டேனிஸ்காரர்களின் பழையகட்டிடத்தைப் புதுப்பித்து அங்கே தபால் நிலையம் செயல்படுகிறது. தபால் தந்தி அமைப்புகளெல்லாம் ஆங்கிலேயர்கள் அவர்கள் ஆட்சியில் செய்தது என்றார் அங்கிருந்த தபால் நிலைய அதிகாரி.

**கலெக்டர் பங்களா :**

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் அதாவது 1845 ஆம் ஆண்டிற்கு பின்பாக ஆங்கிலேய நிர்வாகியின் மாளிகை. கடலுக்கு வெகு அருகில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் இட அமைதி சிறப்பானது; தாலாட்டுப் பாடும் தரங்கை கடலலைகளின் கடலோசை காதில் படுகிறது. ஓயும் மனிதம் ஓயா கடலலை கண்டுகளித்து உற்சாகம் அடைவதற்கான இடம் இதுவே! கொஞ்ச காலத்திற்கு முன்பெல்லாம் 'நாடார் வீடு' என பெயர்பெற்றிருந்தது. கடலலைகளை நோக்கியவாறு கட்டப்பட்ட இந்த வசந்த



மாளிகை Bungalow on the Beach என அழைக்கப்படுகிறது. Neemrana hotels க்கு சொந்தமான தனியார் கட்டிடம். பழமையே புதுமையாய் திகழும் இந்த மாளிகையில் தங்கி சோழமண்டல கடற்கரையின் அழகை ரசிக்க ஆசை கொண்டதுதான் மிச்சம்.

**கடல்சார் அருங்காட்சியகமும் மற்ற கட்டிடங்களும்:**

Tranquebar Maritime Museum and Danish - Indian Cultural Centre என்ற பலகை நம்மை வரவேற்கிறது. பார்க்க வேண்டிய அற்புதமான மியூசியம் இது. தரங்கம்பாடியைக்




குறித்த வரலாற்று நூல்கள் இங்கு கிடைக்கும். 'Tranquebar Cemeteries and Grave Monuments - Karin Kryger and Lisbeth Gasparski - the Royal Danish Academy of Fine Arts, School of Architecture Publishers -2003' என்ற ஒரு புத்தகம் கிடைத்தது. அதை வாசித்து வாசித்து இன்பம் காண்கிறேன். இந்த புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு மீண்டும் ஒரு தனிமையான வரலாற்று மரபுநடை மேற்கொள்ள வேண்டும் எனநினைத்துக் கொண்டிருக்கிறேன்.

'Danish Commander's House' என்ற கட்டிடம் கம்பீரமாக நிற்கிறது. ஒரு பாழடைந்த கட்டிடம் என் கருத்தைக் கவர்ந்தது Dilapidated Old Hall அதின் முகப்பில் சூலை சக வருஷம் 1741 என்ற குறிப்பு காணப்படுகிறது. இது மீண்டும் அன்றைய கட்டுமான முறைப்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

இந்த பங்களாவில் தான் சங்கைக்குரிய சிரேஷ்டர் சீகன்பால்க் வாழ்ந்து சாதித்து வரலாற்றில் முதல்வராக



திட்டங்களைக் கொண்டுவந்தது இங்கே தான். இங்கே வந்துசேர்ந்த எங்கள் அனைவரையும் தரங்கை தமிழ் சுவிசேஷ லுத்தரன் திருச்சபை பேராயர் மகாகனம் கிறிஸ்டியன் சாம்ராஜ் அவர்கள் சந்தித்து வாழ்த்தி ஊக்குவித்தார். அந்த இனிமையான வேளையிலே நான் எழுதிய 'சேலத்திற்கு கிறிஸ்தவம் வந்தது ' என்ற நூலை பேராயருக்கு கொடுத்து மகிழ்ந்தேன்.

**தரங்கம்பாடி புதிய எருசலேம் ஆலயம் மற்றும் வரலாற்றுக் கல்லறைகள் :**



டேன்ஸ்போர்க் கோட்டைக்குள்ளே ஒரு சிற்றாலயம்கோட்டையோடு சேர்ந்தே 1620களில் கட்டப்பட்டிருந்தது. அது மிகவும் சிறியதாக இருந்ததால், டேனிஸ் படையினருக்காவும் அதிகாரிகளுக்காகவும் சீயோன் ஆலயம் (Zion Church) 1701ல் கட்டப்பட்டது. அதனால் கோட்டைக்குள் இருந்த சிற்றாலயம் கைவிடப்பட்டது. ஜெர்மானிய திருத்தொண்டர்கள் அனைவருக்குமான ஆலயமாக - குறிப்பாக சுதேசிகளுக்காக ஒரு ஆலயத்தை தட்டாரத் தெருவில் (Goldsmith's Street) 1707ல் கட்டிமுடித்தார்கள்; அதற்கு அவர்கள் வைத்த பெயர் புதிய எருசலேம் ஆலயம் என்பதே (14-8-1707). அது இன்று இல்லை பின்நாட்களில் ஏற்பட்ட கடல்கோளில் கடலுக்குள் போனது.

மீண்டுமாய் ஒரு புதிய எருசலேம் ஆலயம் (New Jerusalem Church) 9-2-1717 அன்று சீயோன் ஆலயத்திற்கு எதிரே, தரங்கம்பாடியில் மிஷன் பணிகளுக்கு நட்பற்ற மனப்பான்மை கொண்ட ஹேசியஸ் ( Hassius)க்கு பிறகு புதிய ஆளுநராக வந்த புரூன் (Brun) என்பவரைக் கொண்டு அஸ்திபாரமிடப்பட்டது. இந்த புதிய எருசலேம் ஆலயம் சிரேஷ்டர் சீகன்பால்க்கின் மகத்தான மணிமுடிப்பான சாதனை. 1718ல் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆலயம் ஜெர்மானிய பரோக் பாணியில் சிலுவை வடிவில் அமைக்கப்பட்டது (Baroque style with Cruciform) கட்டப்பட்டதிலிருந்து இன்றுவரை மாற்றங்கள் ஏதுமின்றி திகழ்வதே இதன் சிறப்பு.

**புதிய எருசலேம் ஆலய கல்லறைத் தோட்டம் :**

'இஸ்ரவேலின் தேவனும் இரட்சகருமாகிய நீர் மெய்யாகவே உம்மை மறைத்துக் கொண்டிருக்கிற தேவனாயிருக்கிறீர். ' - ஏசாயா 45: 15

இந்த கல்லறைகளை எல்லாம் குறிப்பெடுத்து ஆய்வுசெய்த வரலாற்று அறிஞர் ஒருவர் மேற்குறித்த வசனத்தை மேற்கோள் காட்டி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். கிறிஸ்துவின் திருத்தொண்டர்கள் அன்னியரும் பரதேசிகளுமாய் இங்கு வந்து திருத்தொண்டாற்றியபோது, அவர்கள்பட்ட பாடுகள், சந்தித்த இழப்புகள், இவற்றையும் தாண்டி அவர்கள் நிர்கதியாய் நின்றபோதெல்லாம் நேர்கொண்ட புறக்கணிப்புகள், இறுதியில் தங்களையே மரணத்தில் ஊற்றிய நிலைகளில் இஸ்ரவேலின் இரட்சகராகிய தேவன் தன்னை மறைத்துக் கொண்டாரா? என்ற கேள்வியை ஏசாயா தீர்க்கனின் புலப்பலின் அடிப்படையிலேயே கேட்கிறார்.



சோகக் கதைகள், கண்ணீரின் பாத்திரங்கள், என்று ஒவ்வொரு கல்லறையும் சொல்லும் சோக வரிகளை இங்கே விவரிக்க எனக்கு மனதில்லை

ஆனாலும் ஒன்றை மட்டும் சொல்கிறேன்: கல்லறைகளை கனிவாக நடத்தாமல் கல்வெட்டுகள், கிரானைட் அமைப்புகள், சுண்ணாம்புக் காரை கட்டுமானங்கள் என்று வித்தியாசமில்லாமல் சகட்டுமேனிக்கு சுண்ணாம்பு அடிக்கும் திருப்பணிகளை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏன் இப்படி ஒரு முட்டாள்தனமான திருப்பணி?

**தட்டாரத் தெருவில் ஒரு பார்வை:**

பொற்கொல்லர்கள் வாழ்ந்த தெரு (Goldsmith's Street) நாட்டு ஓடுகள் வேய்ந்த பழமையான வீடுகளைக் கண்டோம்.

இந்தத் தெருவின் கோடியில் அன்று அனைவருக்குமான முதல் புதிய எருசலேம் ஆலயம் (14-8-1707)இருந்தது. இதனையே 'இப்பொழுதிருக்கிற தட்டாரத் தெருவின் ஓர் அந்தத்தில்? ' (P. no. 10) என்று தனது 'தரங்கை மிசியோன் சரித்திரம்' என்ற நூலில் அதன் ஆசிரியரான சங்கை ஞா. சாமுவேல் ஐயர் குறிப்பிட்டிருக்கிறார். நாம் ஏற்கெனவே அறிந்தபடி அந்த ஆலயம் கடலுக்கு இறையானது. பொறையாறு



**பெத்லெகேம் ஆலயம்:**



தரங்கம்பாடி அருகே உள்ள பொறையாறு தமிழ் சுவிசேஷ லுத்தரன் திருச்சபையின் பெத்லெகேம் ஆலயம் 1746ல் கட்டிமுடிக்கப்பட்டது. இதுவும் சிலுவை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. (It is also a Cross shaped Church like New Jerusalem Church) அந்த ஆலயத்தின் உள்ளே திருத்தொண்டர் கரோல் எர்னஸ்டஸ் கிரால் (Rev. Carolus Ernestus Grahl-1838-1879) மற்றும் எட்டாவது தரங்கை பேராயர் ஜெயசீலன் ஜேக்கப் ஆகியோரின் கல்லறைகள் உள்ளன. ஆலயத்தின் பின்புறம் கல்லறைத் தோட்டம் அதில் சிரேஸ்ததார் வேதமுத்து (1850) என்ற தமிழ் கிறிஸ்தவரின் கல்லறை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலய கல்லறைத் தோட்டத்தில் எனது மனைவி டாக்டர் திருமதி D. M. ஏஞ்சலின் சகிலா அவர்களின் கொள்ளுதாத்தா திரு. D. வேதநாயகம் பிள்ளை, கொள்ளுப் பாட்டி திருமதி. அன்னம்மாள், இவர்களது மகள் செல்வி கிரேஸ் வேதநாயகம், மற்றும் தாய்வழி கொள்ளுப் பாட்டி திருமதி. S. ரத்தினக் கண்ணு அம்மாள் (101), ஆகியோரின் கல்லறைகளுக்கு மலரஞ்சலி செலுத்தினோம்.

இந்த வரலாற்று மரபுநடையில் நானும் எனது மனைவியும், மற்றும் சங்க உறுப்பினர் திரு. S. ஆல்பிரட் குணசிங் ஆகியோர் பங்கேற்றோம். சேலத்திலிருந்து வந்த Bro. பாஸ்கரன், சென்னை பேராசிரியர் மைக்கேல் மோசஸ் பாரடே, மற்றும் அவரது மாணவர், ஈரோடு திரு. ரமேஷ் புங்கபாடி, மதுரை திரு. டேவிட் ஞானய்யா, திரு. ஜெபக்குமார் ஆகியோரும் பங்கேற்றனர். என்றென்றும் நினைவு கூரத்தக்கதாக இந்த வரலாற்று மரபுநடை அமைந்தது சிறப்பு.

# பேராயர் அசரியாவின் வாழ்க்கை மற்றும் மிஷனரி பணியிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை

1. அசரியா தனக்கு கொடுக்கப்பட்ட அழைப்பிற்கும் மிஷனரி பணிக்கும் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்திருந்தார். எந்தவித கடினஉழைப்பிற்கும்அசரியாதயாராகஇருந்தார். ஆண்டவருக்காக எந்தவித தியாகமும் செய்ய அவர் தயங்கியதே கிடையாது. ஆண்டவருக்காக உழைக்கும் படியாக அவர் தந்திருக்கும் அழைப்பு இரக்கமுள்ள தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறது என உணர்ந்தார். அவர் செய்த பணிகளில் அவருக்கு மிகுந்த மன மகிழ்ச்சி இருந்தது. மாட்டுவண்டியில் ஏறி அவர் மகிழ்ச்சியாக சுவிசேஷபணியில் ஈடுபடும் போது எடுத்திருக்கும் புகை படத்திலிருந்து அவர் உள்ளத்தில் ஆண்டவர் மீதுள்ள அர்ப்பணிப்பை நாம் உணரமுடிகிறது.

2. அவர் ஒரு ஜெபவீரர். ஜெபமே அவரது வாழ்விற்கு ஆதாரமாய் காணப்பட்டது. வீட்டிலாகிலும் வெளியிலாகிலும் ஊழியத்திற்காக கிராமத்தில் தங்கும் இடமாகிலும் அல்லது பயணம் சென்று கொண்டு இருக்கும் வேளையானாலும் சரி காலையில் 4 1 / 2 மணிக்கு எழுந்து ஆண்டவரோடு தனது அமைதி நேரத்தை செலவிட அவர் தவறியதே கிடையாது. இப்படி தான் நிறைவேற்ற விருந்த அனைத்து பணிகளுக்கும் தேவையான பெலத்தை, ஆண்டவரின் சமூகத்தில் காத்திருப்பதன் மூலம் பெற்றுக்கொண்டார்.

3. அவருக்கு உள்ளான தாழ்மை இருந்தது. அசரியாவைக் குறித்து அறிந்தவர்கள் அனைவருக்கும் அவரது உண்மையான தாழ்மை உள்ளத்தையும் தாழ்மையான வாழ்க்கையையும் நன்கு தெரிந்திருந்தனர்.

4. அவர் சுயக்கட்டுப்பாடோடு வாழ்ந்தவர். கட்டுப்பாடு இல்லாத வாழ்க்கை பல பாவங்களை பிறப்பிக்கும் என்று அசரியா நம்பினார். அவரே நல்லொழுக்கத்தையும் கட்டுபாடையும் கடைபிடித்திருந்தபடியால் மற்றவர்களிடத்தில் ஒழுக்க நெறிகளை எதிர்பார்க்கும் எல்லா உரிமையும் அதிகாரமும் அவருக்கு இருந்தது.

5. ஆவிக்குரிய கண்ணோட்டத்தோடு எல்லா காரியங்களையும் பார்க்கும் ஆவல் உடையவராக இருந்தார். எதனையும் அற்பமாகவோ இலகுவாகவோ எண்ணாமல் முழுமனதாய் ஆழ சிந்தித்து விவாதித்து முடிவெடுத்தார்.

6. மக்களின் நலனுக்கே முன்னுரிமை தந்தார். அவர் தன்னோடு உழைத்து வந்த சக ஊழியர்களின் நிலைகளை மனதில் கொண்டு பொருள்களைக் குறித்தோ இடத்தைக் குறித்தோ கவலைப்படாமல் திட்டங்களை செயலாக்கின படியால் அவர் தன்னோடு பணிபுரிந்தவர்களை வெகுவாய் அவர் விசுவாசித்து அவர்களை கண்ணியத்துடன் நடத்தினார்.

7. மிஷனரி பணிக்கு குறிப்பாக திருச்சபை நிறுவும் நற்செய்தி பணிக்கு தன்னை முற்றிலும் அர்ப்பணித்திருந்தார். அவர் ஒரு பேராலயத்தின் பேராயர் என்ற பெரும் பதவியோடு இணைந்துள்ள அனைத்து திருச்சபை பொறுப்புகளையும் கவனித்து வந்த போதும், ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தி மீட்கும் தெய்வப்பணியிலும், திருச்சபை நிறுவும் மிஷனரி பணியிலும் தனது தனி கவனத்தை செலுத்தினார்.

8. அவர் சுயமாக கற்றுக் கொண்ட மனிதர். தனது உடல் நல குறைவின் நிமித்தம் பட்டப்படிப்பை முடிக்காமல் போனாலும், அவருக்கு படிப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. அவர் எங்கு சென்றாலும் எதைப்பார்த்தாலும் யாரை சந்தித்தாலும் புதிய புதிய காரியங்களை அறிந்து கொள்வதில் நாட்டம் உடையவராக இருந்தார். இவர் நூற்கள் வாசிப்பதில் மிகுந்த ஈடுபாடு உடையவர். கையில் புத்தகம் இல்லாமல் அவரை பார்ப்பது மிக அரிது.

9. காலத்தை நன்கு பயன்படுத்தி கொள்வதில் கண்ணும் கருத்துமாய்

இருந்தார். அவருக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்புகளையெல்லாம் தன்னால் முடிந்தவரை நன்கு பயன்படுத்தினார்.

10. தான் ஊழியம் செய்யும் படியாக தெரிந்து கொள்ளப்பட்ட மக்களின் தாய் மொழியை நன்கு கற்றுத்தேற தன்னை அர்ப்பணித்திருந்தார். உண்மையைக் கூற வேண்டுமானால் இலக்கிய தெலுங்கை நன்கு கற்றுத்தேறியதோடு கிராமங்களில் பேசப்படும் நடைமுறை தெலுங்கையும் கற்றுத்தேறி இருந்தார்.

பேராயர் ஸ்டீபன் நீல் கீழ்க்கண்ட பலவீனங்கள் அசரியாவின் வாழ்க்கையில் காணப்பட்டதாக குறிப்பிடுகின்றார். இதிலிருந்து நாம் அறிந்து கொள்கிற மாபெரும் சத்தியம் என்னவென்றால் அசரியா அவரது பலவீனங்களின் மத்தியிலும் ஆண்டவருக்காக பெரிய காரியங்களை சாதித்திருந்தார்.

1. மற்றவரது பார்வையில் தான் செய்கின்ற காரியங்கள் நன்கு அறிந்து துணிவுடன் செயல் பட்டதுபோல் தோன்றினாலும், உண்மையில் அவர் தன்னைக் குறித்து திட்டவட்டமாக அறிந்து இருக்கவில்லை. தன்மேல் அதிகமான பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது என்பதை மட்டும் அவர் நன்கு உணர்ந்திருந்தார்.
2. தெலுங்கை அவர் நன்கு கற்றிருந்த போதிலும் அவர் தெலுங்கில் எழுதமாட்டார். பேராயர் ஒருவர் தான் எழுதுகின்றவற்றில் எந்த தவறையும் இழைக்க கூடாது என்ற கருத்தே இதற்கு காரணம்.
3. ஆங்கிலத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவராக காணப்பட்ட போதிலும் தான் ஒரு பட்டதாரி அல்ல என்ற தாழ்வு மனப்பான்மை அவரை அதிகமாக பாதித்தது. எனவே அவர் எப்போதாகிலும் ஆங்கிலத்தில் முக்கிய சொற்பொழிவு ஆற்ற வேண்டிய வேளைகளில் அவர் தேவையில்லாமல் பதற்றம் அடைந்தார்.

இது ஒரு குறிப்பிட்டக் காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த ஒரு தனி மனிதனின் சரித்திரம். எனவே அசரியாவின் வெற்றியும், தோல்வியும், அவர் வாழ்ந்த நாட்களின் பின்னணியத்தில்தான் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இருந்தாலும் அவரது வாழ்க்கையையும் மிஷனரி பணியையும் குறித்த ஆய்வு நிச்சயமாக இளம் தலைமுறையினரை ஊக்குவித்து அவர்களை மிஷனரி ஊழியத்தில் ஆண்டவருடைய மகிமைக்காகவும் அவருடைய இராஜ்ஜியத்தின் பரப்புதலுக்காகவும் பெரும் சாதனைகளைச் செய்திட அறைகூவல் விடுக்கிறது.

**அருள்திரு.பொன்ராஜ்**
**பணித்தளத்திலிருந்து ...**

கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'** மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த **'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'** (Christian Historical Society) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

**வங்கி விபரம்**

**Name: Christian Historical Society**
**A/c Number : 1748 020000 4906**
**Bank name : Federal Bank**
**IFSC code: FDRL0001748**


**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com

# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

## கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1530 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/
tchsportal.co.in




# Yearly Subscription

# 600

christianhistoricalsociety.in

Apply Now

## Monthly Magazine for church history

Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401